விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆடி 11 துல்ஹஜ்ஜா 30 இதழ் 152

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27-7-1987

# புதிய சமாதான திட்டத்தை தடுப்பதில் ஸ்ரீ.ல.சு.க. தீவிரம்

## இந்தியாவுக்கு அடிமையாவதாக முன்னாள் அமைச்சர் சிறில்மத்தியு கருத்து

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு இணைப்பு புதிய யோசனைகளை அமுல் படுத்த இந்திய-இலங்கை அரசு முனைந்து வரும் இவ்வேளையில் இவற்றை தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலத்த பிரச்சார வேலையில் ஈடுபட்டுள்ளது.

இம்முயற்சிக்காக கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், எதிர்க்கட்சி தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்காவும் தென்

(5ம் பக்கம் பார்க்க)

● ராஜீவ் வருகை, ஒப்பந்தம் தாமதமாகும்?

# தீர்வு குறித்த செய்திகள், தகவல்களை தீவிரமாக ஆராய்வதாக அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வின் முக்கிய விடயமான வடக்கு, கிழக்கு இணைப்புக்குறித்து இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே எதிர்வரும் புதன்கிழமை ஒப்பந்தம் ஒன்றில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொழும்பு வந்து நேரில் கைச்சாத்திடுவார் என இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

ஆயினும் மேற்படி ஒப்பந்தம் குறித்து இலங்கையிலிருந்து வந்து கொண்டிருக்கும் பலதரப்பட்ட அறிக்கைகள், செய்திகள் என்பவற்றை ஆராய்ந்து மீள்பரிசீலனை செய்யவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ராஜீவ்காந்தி தமது இலங்கை விஜயம் மற்றும் இலங்கையுடனான ஒப்பந்தம் பற்றி புதுடில்லியில் நேற்று கருத்துத் தெரிவிக்கையில்: ''இலங்கைக்கு விஜயம் செய்யும் திகதி குறித்து தாம் இன்னமும் முடிவு செய்யவில்லை என்றும் ஓரிரு தினங்களிலேயே அதுபற்றி தீர்மானிக்கப்படும் (5 ம் பக்கம் பார்க்க)

● இலங்கை, இந்திய உடன்பாடுகள்

# பிரேமாவின் யோசனைகளும் பரிசீலனை செய்யப்படும்!



நேற்றைய 'அலரிமாளிகை' சந்திப்பின் பின்

## ஜனாதிபதி கருத்து!

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக இந்தியாவுடன் இலங்கை செய்துகொள்ளவிருக்கும் உடன்படிக்கைகள் குறித்து பிரதமர் திரு. ரணசிங்க பிரேமதாஸா தெரிவிக்கும் யோசனைகளும் பரிசீலனை செய்யப்படும்'' என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அவரை ஜனாதிபதி நேற்று மாலை சந்தித்தார். அதன் பின்னரே மேற்கண்டவாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸா பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கான தமது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று மாலை நாடு திரும்பினர்.

நேற்று முன்தினமிரவு அவர் நாடு திரும்புவதாக இருந்தது. ஆனால் அவர் நேற்று மாலையே இங்குவந்து சேர்ந்தார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பிரதமரையும், பாரியாரையும் பொது நிர்வாக அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரம, உள்நாட்டு அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம், புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் உட்பட பல எம்.பி.க்கள் பிரமுகர்கள் வரவேற்றனர்.

பிரதமர் விமானநிலைய வரவேற்பு வைபவங்கள் முடிவடைந்ததும் நேராக தமது உத்தியோகபூர்வ வாசல் தலமான 'அலரிமாளிகை' சென்றடைந்தார்.

தொடர்ந்து ஜனாதிபதிதமது பாரியார் சகிதம் 'அலரி மாளிகை' சென்று பிரதமரைச் சந்தித்தார்.

இதுஒரு குசலம் விசாரிக்கும் சந்திப்பாக இருந்தபோதிலும் (5-ம் பக்கம் பார்க்க)

## 5,400 தமிழ் கைதிகளை விடுதலைசெய்ய அரசு இணங்கியிருப்பதாக தகவல்

(கொழும்பு)

இந்திய-இலங்கை அரசு தலைவர்களுக்கிடையில் இனப்பிரச்னைத்தீர்வு தொடர்பாக புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பட்சத்தில் தடுப்புக்காவலிலுள்ள 5,400 தமிழ் கைதிகளும் விடுவிக்கப்படுவார்களென்றும் இதற்கு அரசு இணங்கியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது

அறசரகாலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் கடந்த மே மாதத்திற்குமுன் தடுப்புக்காவலிலுள்ள 3,310 தமிழ் கைதிகளும் அண்மைய வடமராட்சி இராணுவ நடவடிக்கையில் கைதான 2,100 பேரும் இதில் அடங்குவதாகவும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் எப்பொழுது விடுதலையாவார்களென்று தெரிவிக்கப்படாதபோதிலும் ஒப்பந்தப்படி போராளிகள் ஆயு

(5ம் பக்கம் பார்க்க)

## 1000 தொன் உணவு பொருள்களுடன் மீண்டும் நிக்கோரேட்

யாழ்ப்பாணம், திங்கள்.

யாழ். குடாநாட்டு மக்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்களைஏற்றிக் கொண்டு "எம். வி. நிக்கோரேட்'' என்னும் இந்தியக்கப்பல் இரண்டாவது தடவையாக நேற்றுகாங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

[5ம் பக்கம் பார்க்க]

## இலங்கை இனப்பிரச்னைக்கு இன்னும் 3 தினங்களில் தீர்வு

### செஞ்சிலுவை தலைவர் சௌத்திரி நம்பிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்.

"இலங்கை இனப்பிரச்னைக்கு இன்னும் மூன்று தினங்களில் தீர்வு காணப்பட்டுவிடும் என்று யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இந்தியா செஞ்சிலுவைச் சங்கக்குழுவின் தலைவர் திரு சௌத்திரி நேற்று தம்மைச் சந்தித்த மன்னார் துயர்துடைப்புச் சங்கத் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

திரு. சௌத்ரி மேலும் தெரிவித்ததாவது: யாழ்ப்பாண மக்களுக்கு தற்போது வழங்கப்படும் நிவாரணப் பொருள்களின் உதவி இந்தியாவின் முதற் பகுதி உதவியாகும்.

இனப்பிரச்னைக்கு ஒருதீர்வு ஏற்பட்டபின்னர் வடக்கு-கிழக்குப் பகுதிகளை புனரமைப்

[8ம் பக்கம் பார்க்க]

யாழ் போதனைவைத்தியசாலையில்

## வார்ட்டுகளில் அனுமதிபெறும் நோயாளிகள் அதிகரிப்பு

(அலுவலக நிருபர்)

யாழ் அரசினர் போதனை வைத்தியசாலை மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதுடன் நோயாளர் தொகையும் அதிகரித்துள்ளது

சுமார் 1015 கட்டில்களைக் கொண்ட இந்த வைத்தியசாலையில் இப்போது தொழாயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் வார்ட்டுக்களில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

கோட்டை இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதலுக்கிலக்

(5-ம் பக்கம் பார்க்க)

அச்சுவேலியில் ஷெல் தாக்குதல்:

## 10 மாத குழந்தை உட்பட 5 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், திங்.

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து நேற்று காலை இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் அச்சுவேலியில் விழுந்து வெடித்ததில் பத்துமாதக் குழந்தை, அதன் தாய் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர். பலகடைகள், திரை அரங்கு என்பன சேதமடைந்தன.

நேற்று முன்தினமிரவு வளலாய் இராணுவ முகாமிலிருந்து இராணுவம் குடிமனைப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் பீதியுற்ற பத்தமேனி மக்கள் வீடுகளைவிட்டு வெளி

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள்-மின்சார உபகரணங்கள் மலிவு விற்பனைக்குண்டு. 181, குருசோ வீதி, யாழ்ப்பாணம். சி-0002

Phillips-Two in One நசனல் கசற் றெக்கோடர் உடன் விற்பனைக்குண்டு. Hi-Fi Technique, 29, செட்டித்தெரு லேன், நல்லூர், யாழ்ப்பாணம். சி-0036

இறக்குமதி செய்யப்பட்ட Honda Chaly C-50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. 'சுப்பகனன்' இல 32, ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்திக்கருகாமை) யாழ்ப்பாணம். (சி-9989)

நாயன்மார்கட்டு இராமநாதன் வீதியில் 1 பரப்பு 7 குழிக் காணி நல்ல தண்ணிக் கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். சதானந்தன், ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, நாயன்மார்கட்டு. சி-0030

நல்ல நிலையில் உள்ள பல சரக்குப் பெட்டிகள், சாப்பாட்டு மேசை, ஸ்ரீல் கதிரை, கண்ணாடி அலுமாரி, விருக்கி, சோக்கேஸ் உடன் விற்பனைக்குண்டு. தகவல்:- ராஜ் தொழிற்சாலை, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். சி-0020

வெள்ளை, பிறவுண், கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், பிறவுண், கறுப்பு சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [சி-0035]

''பிலிப்ஸ்'' குளிர்சாதனப் பெட்டி, ''சிங்கர்'' 270 எலக்ரிக் தையல் மெஷின், ''நாஷனல்'' RX 5045F, ரூ இன் வண், நாஷனல் RX 100 ரூ இன் வண், நாஷனல் RX FM -45 ரூ இன் வண், 'யசிக்கா' எலக்ரோ 35 கமரா (F)பிலாசுடன், ''சன்யோ'' கார் ரேடியோவும் கசட்டும், ''சாப்'' G. F. 6060 ரூ இன் வண் விற்பனைக்கு. தொடர்பு:- ரெலிவோய்ஸ் என்ஜியேர்ஸ், 184 A, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். (சி-0018)

## தேவை

ஸ்ருடியோ வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் தேவை. தங்குமிடவசதிகள் கொடுக்கப்படும். காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் [ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த] நாட்களில் நேரில் வரவும். ''நமோஸ்கார்'', டச்சு வீதி, சாவகச்சேரி. சி-9977

ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து கற்பிப்பதற்கு அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை. 30-07-87 இற்கு முன் விண்ணப்பிக்கவும். Bond Institution, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சி-0006

காரைநகர் அல்லது யாழ்ப்பாணப் பகுதிகளில் சகல வசதிகளுடன்கூடிய சிறிய வீடு வாடகைக்கு உடன் தேவை. தொடர்பு: கனகசபை தர்மகுலசிங்கம், கருங்காலி, காரைநகர். (சி-0045)

## தேவை

நல்ல நிலையிலுள்ள MD 90 மோட்டார்சைக்கிள் தேவை. இலக்கம்,விலை, விபரங்களுடன் தொடர்புகொள்ளவும் அல்லது கொண்டுவரவும் கிறீன் ஸ்ரார் பேக் கவுஸ், மாதகல் [சி 0054]

## சேவை

ஆங்கில, தமிழ் தட்டச்சு வேலைகள் ரோனியோ பிரதி செய்தல் ஆகியன தாமதமின்றிச் செய்து கொடுக்கப்படும் சுப்பகனன், 32, ஸ்ரான்லி வீதி, (வெலிங்டன் சந்திக்கருகாமை) இயங்கிவருகிறது. சி-9990

எனது ஸ்தாபனத்தில் கத்தோலிக்க மணமக்கள் கீழ்க்காணும் பதவியில் உண்டு. பட்டதாரி-பாங். கத்தோலிக்க குடும்பத்தினர் தொடர்பு கொள்ளவும். ABCDE விவாகப் பொருத்துனர், 91/16, இந்து மகளிர் லேன், கந்தர்மடம். (கி-0047)

## மணப்பந்தல்

எம்மிடம் எல்லா இன, மதத்திலும், உத்தியோகத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் நேரே சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (சி-0031)

யாழ். இந்து செவ்வாய் குற்றமுள்ள கனடாவில் தொழில்புரியும் 35 வயதுடைய மணமகனுக்கு பெண் தேவை, யாழ்.இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 30 வயதுடைய செவ்வாய் குற்றமுள்ள கனடா போகவிருக்கும்; முதிசமுள்ள மணமகனுக்கு பெண் தேவை அல்லது மாற்று திருமணம் செய்ய விரும்பியோரும் தொடர்பு கொள்ளவும். ABCDE விவாகப் பொருத்துனர், 91/16, இந்து மகளிர் லேன், கந்தர்மடம். [சி-0048]

## வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட அதிநவீன மணமகளின் தலைச்சோடனைகள் வாடகைக்கு பெற்றுக்கொள்ள. சனகசபை தர்மகுலசிங்கம், கருங்காலி, காரைநகர். [சி-0046]

## வகுப்புக்கள்

இவ்வருட ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தோர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இவர்களுக்குரிய பரீட்சை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மேலதிக விபரங்களுக்கு அதிபர், ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (சி-0050)

## தவறிவிட்டது

இல: 441280939V அ. தில்லையம்பலம், அராலி தெற்கு, அராலி என்பவருடைய அடையாள அட்டையும், டயறியும் நல்லூருக்கும்-யாழ். பல்கலைக் கழகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி-0024

## 51-ம் நாள் நினைவஞ்சலி



**திரு.பொ. நாகரத்தினம்**
(இளைப்பாறிய அதிபர்)

மலர்வு: 18-01-1925
உதிர்வு: 07-06-1987

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், பாசத்தின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வழிநடத்திய அன்புத்தெய்வமே! எங்கள் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றீர்கள். நாட்கள் பலகடந்தாலும் உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் இதயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்லஇறைவனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள்
பிரிவால் துயறுரும்,
மனைவி, பிள்ளைகள்
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை, (சி 0038)

## 5-வது ஆண்டு நினைவஞ்சலி



**சி. க. ஆ. கதிரவேலு**
(பிரபலவர்த்தகர்,
துறைமுகம், காரைநகர்)

தோற்றம்: 20-06-1914
மறைவு: 22-07-1982
திதி: 27-07-1987

சீருடன் எம்மை வளர்த்து சிறப்புடன் வாழ்ந்த எமது அன்புத்தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து இன்றுடன் ஆண்டுகள் ஐந்தாகிவிட்டாலும் நீங்கள் என்றென்றுமே எம் நெஞ்சில் நீங்காது நிறைந்திருப்பீர்கள், நீங்கள் இன்பமோட்சம் எய்திட போசுட்டி முருகப்பெருமானைப்பிரார்த்திக்கிறோம்.

உங்கள் நினைவில்வாழும்
அன்புமனைவி, மக்கள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சம்பந்தர்கண்டி,
காரைநகர். (சி 0001)

## முதலாவது நினைவஞ்சலி



**வயிரவன் நல்லையா**

மலர்வு: 12-11-1950
உதிர்வு: 28-07-1986

தோளோடு தோள் கொடுத்து தொழில்புரிந்த தோழா தாகத்திற்கு தண்ணீர் எடுக்கச்சென்ற நீ! எம்மைஎல்லாம் தணியாத தாகத்தில் தவிக்க விட்டு தனியாக நெடும் பயணம் சென்று விட்டாய்! உமது அகாலமரணம் எம்மை நீங்காத துயரத்தில் ஆழ்த்திவிட்டது உமதுஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

ஊழியர்கள்
சீ நோர் அபிவிருத்தி
நிறுவனம்.
காரைநகர் - குருநகர்.
[சி 0026]

## 60–வது நாள் நினைவு தினமும் அந்தியேட்டி அழைப்பும்



**இ. இராஜ்மோகன**

மலர்வு: 07-03-68
உதிர்வு: 30-05-87

அகால மரணமான எமது சிரேஷ்ட புத்திரன் செல்வன் இராஜ்மோகன் (மருத்துவபீடம்) மறைந்த 60-வது நாள் 28-07-87 செவ்வாய்க்கிழமை ஆகும்.

அன்றைய தினம் ஆவரங்காலிலுள்ள ராணி இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற இருப்பதால் உறவினர், நண்பர்கள் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்

திரு. க.இராஜகோபால்
அதிபர்,
யாழ்/ திக்கம் சித்தி
விநாயகர் வித்தியாலயம், அல்வாய்.
ராணி இல்லம்,
சந்தைவீதி,
ஆவரங்கால்.
(சி-0053)

## பிரமபுத்ரா மீண்டும் பெருகுகிறது

புதுடில்லி, ஜூலை 26

அஸாமில் பெய்த பெரும் மழையை அடுத்து மீண்டும் பிரமபுத்ராவும் அதன் கிளை நதிகளும் பெருக்கெடுத்துள்ளது

மீட்புப் பணிகளில் இராணுவப் படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.


## பொதுச்சபைக் கூட்டம்

பலாலி, ஞாயிறு

சுன்னுகம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் ஆகஸ்ட் முதலாம் தேதி சனிக்கிழமை சுன்னுகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர் திரு சி. குமரவேல் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

அடுத்த வருடத்திற்கான செயல் திட்டங்கள் ஆராய்தலும், சென்ற வருட வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தலும் முக்கிய விடயமாக இடம்பெறும்.

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



**ஆறுமுகம் சேயோன்**
(அப்பு)
(ஆங்கில ஆசிரியர்)

ஆண்டவன் படைப்பு:
18-9-1951
அரக்கர் அழிப்பு:
27-7-1983

செந்தமிழர் படுந்துயரம்
கண்டே அன்று
செம்மையுடன்
அறப்போரில்
குதித்துநின்றாய்
எந்தவிடர் வந்தாலும்
தாங்கி நின்றாய்
எம்மினத்தின்
வாழ்வுக்காய்
உயிரைநீத்தாய்
வெந்தழலின் மிக்கதொரு
கொடுமையான
வெலிக்கடையாம்
சிறைதன்னில் உன்னை
அந்த
பந்தமிலா அரக்கரன்று
பதைக்கக் கொன்றார்
பாரினிலே உன்நாமம்
என்றும் வாழும்
அன்னையினை
சகோதரத்தை
அன்பாய்க்காத்து
அவர் நிழலைப் பிரியாது
என்றும் நின்றாய்
அன்பொழுகும்
உன்வார்த்தை
கேட்போம் என்றே
ஆர்வமுடன்
காத்திருந்தார்
அவர்கள் எல்லாம்
உன்பிரிவைத் தாங்காது
புலம்புகின்றார்
உத்தமனே உந்தனது
தியாகப்பாதை
என்பையெலாம்
உருக்குதையா
எழுந்துவாராய்
இன்றெமது வீரரது
தீரம்காண.

தாய் சகோதரர்,
மருமக்கள்.
பண்ணுகம்,
சுழிபுரம். [ஏ 1965]

## சைவப்பெரியார் குருபூசை

31-7-1987 வெள்ளிக்கிழமை காலை 8-30 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் இக்கல்லூரி இந்து மாமன்றத்தினுற் கொண்டாடப்படும்.

இத்தருணம் எமது அங்கத்தவர்களைச் சமூகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

க. கிருஷ்ணபிள்ளை
தலைவர்

அ. சோமசுந்தரம்பிள்ளை
காரியதரிசி

சைவப் பெரியார் நூற்றாண்டு விழாச் சபை.
[சி 0015]

# இந்திய அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

# இடைத்தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை

## மந்திரி சபை 'மினி' மாற்றத்தின்பின் நிருபர்களிடம் ராஜீவ்

புதுடில்லி, ஜுலை. 26

**இந்திய மத்திய அமைச்சரவையில் தற்போது மேற்கொள்ளப்பட்டது சிறிய மாற்றமே. நாளை ஆரம்பமாகும் இந்திய பாராளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடரின் இறுதியில் அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள் செய்யப்படும்.**

இந்திரா காங்கிரஸ்கட்சியும் மாற்றி அமைக்கப்பட இருக்கிறது. கட்சியைப் பலவீனப் படுத்துவோர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவர்

எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுக்கிறார்கள் என்பதற்காக இடைககாலத்தேர்தல்ஒன்றை நாம் நடத்தப்போவதில்லை. உரியகாலம் வரும்போது பொதுத்தேர்தல் நடைபெறும்.

இவ்வாறு இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி புதுடில்லியில் பத்திரிகையாளர்களிடம் நேற்று மேற்கண்டவாறு கூறினார்.



தமது அமைச்சரவையில் நேற்று மேற்கொண்ட 'மினி' மாற்றத்தின் பின் அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து முடித்த பின்னர் திரு. காந்தி பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது மேலும் கூறியதாவது:

### இப்போதைக்கு நடவடிக்கை இல்லை

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை நாம் தொடர்ந்தும் கட்சியில் வைத்திருக்கமுடியாது எனவே அவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றத் தீர்மானித்துள்ளோம். எனினும் எவர்மீதும இப்போதைக்கு நடவடிக்கை எடுக்கும் நோக்கம் எமக்கு இல்லை.

மகாராஷ்டிர மாநிலஆட்சியில் தலையிட்ட ராஜஸ்தான் மாநில கவர்ணர் திரு. வசந்திரா பட்டேலிடம் அவரது நடவடிக்கை குறித்து பேச்சு நடத்தினோம். இனிமேல் அவர் அப்படி நடக்கமாட்டார் என நம்புகிறோம்.

இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் உள்ள மாநிலங்களில் தலைமைப்பீடத்தில் எதுவித மாற்றமும் செய்யப்படமாட்டாது.

உலகச் செய்திகள்

## சத்துணவில் நஞ்சு:

## இரு வாரத்தில் 456 மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி

சென்னை, ஜுலை. 26

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பள்ளிக்கூடமொன்றில் சத்துணவு அருந்திய 116 மாணவர்கள் உணவில் நஞ்சு கலந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கடலூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் அருந்திய உணவில் பல்லி ஒன்று விழுந்து இறந்திருக்கக் காணப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

இதேவேளையில், பாதிரிப் புலியூர் கிராமத்திலுள்ள பள்ளிக்கூடக்குழந்தைகளுக்கு பரிமாறப்பட்ட உணவில் நஞ்சு கலந்திருந்ததையடுத்து கடந்த வியாழனன்று 340 மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## வளைகுடாவில் அமெரிக்க நடமாட்டத்தை தடுத்து நிறுத்துக

### ஈரான் ஐ. நாவுக்கு புகார்

நியூயோக், ஜுலை, 26

வளைகுடாவில் அமெரிக்க இராணுவ நடமாட்டம் அதிகரித்திருப்பதனால் பதற்றம் மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. எனவே அமெரிக்க இராணுவ நடமாட்டத்தை உடன் தடுத்து நிறுத்துமாறு ஈரான் ஐ நா பொதுச்செயலாளரைக் கேட்டுள்ளது.

குவெய்த் எண்ணைக் கப்பல்களுக்கு பாதுகாப் அளிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு அமெரிக்க கப்பல்கள் வளைகுடாவில் நடமாட்டத்தை அதிகரித்துள்ளன. இதனை உடன் தடுத்து நிறுத்த ஐ நா. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஜனுப் அலி அக்பர் வெலாஹிட்டி ஐ. நா. பொதுச்செயலாளர் திரு. பெரஸ் புகுயிலருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

### அமெரிக்கா தொடர்ந்து உறுதி

இதேவேளையில் வளைகுடாவில் குவெய்த் எண்ணைக் கப்பல் ஒன்று கண்ணி வெடியில் அகப்பட்டு சேதமடைந்துள்ள போதிலும் குவெய்த் கப்பல்களுக்கு தொடர்ந்தும் அமெரிக்க கடற்படைக்கப்பல்கள் பாதுகாப்பு வழங்கும் என்று அமெரிக்கா உறுதி கூறியுள்ளது.

இதுஇவ்வாறிருக்க வளைகுடாவில் போர்நிறுத்தத்தை மேற்கொள்ளுவதற்கு ஐக்கியநாடுகள்சபை மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை வளைகுடா ஒத்துழைப்புச்சபை வரவேற்றுள்ளது.

## மலேஷியாவும் சோவியத் ஆயுதங்களை வாங்கும்

### பாதுகாப்புத்துறை நவீனமயமாகிறது?

கோலாலம்பூர், ஜுலை 26

மலேஷியாவும் சோவியத் யூனியனிடம் இராணுவ ஆயுதங்களையும் உபகரணங்களையும் இறக்குமதி செய்ய உள்ளது.

இதுகுறித்து மலேஷிய பாதுகாப்பு அமைச்சர் துங்கு அகமத் றிஸாவுதீன் மறைமுகமாகத் தெரிவித்துள்ளார்.

மலேஷிய பாதுகாப்புத் துறையை நவீனப்படுத்த வேண்டிய நிலையில் நாம் இன்று இருக்கிறோம். இன்றைய சூழ்நிலையில் நாம் யதார்த்தமாக நடந்து கொள்ள வேண்டும் என்று மலேஷிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சோவியத்யூனியனிலிருந்து ஆயுதங்களையும் இராணுவ உபகரணங்களையும் இறக்குமதி செய்வது குறித்து தற்போது உயர்மட்டத்தில் ஆராயப் பட்டு வருவதாகவும் துங்கு றிஸாவுதீன் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார நெருக்கடி

## சூடானில் ஓராண்டு கால அவசரகால நிலை பிரகடனம்

லண்டன், ஜுலை .26

சட்டவிரோதபதுக்கல் —

அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு, கட்டுப்பாடு—

சட்டவிரோத வெளிநாட்டு நாணய புழககம்—

கடத்தல் - ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு சூடானில் நாடு முழுவதும ஓராண்டுஅவசரகாலநிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாக சூடான் ஆளும் உயர் சபை அறிவித்துள்ளது.

சூடானில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அவசரகாலநடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டே அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக ஆளும் உயர்சபைத்தலைவர் ஜனுப் அகமத் அல் மிர்ஹானி தெரிவித்துள்ளார்.

சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போருக்கும் ஆயுதமுனைக் கொள்ளைகளில் ஈடுபடுவோருக்கும் எதிராகக் கடும்நடவடிக்கை எடுப்பதற்கு இந்நெருக்கடி நிலை பெரிதும் உதவுமென்றும் அவர் கூறினார்.

## தமிழகத்தில் மாதாந்தம் 16,000 மதுவிலக்குவழக்குகள்

சென்னை, ஜுலை. 26

தமிழ்நாட்டில் மாதாந்தம் 16 ஆயிரம் மதுவிலக்கு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. மாதாந்தம் 20 லட்சம் லீற்றர் ஊறலும் ஒருலட்சத்து 80 ஆயிரம் லீற்றர் கள்ளச் சாராயமும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன என தமிழக மதுவிலக்கு பிரிவு பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த6மாதகாலத்திலேயே மதுவிலக்கை மீறுவோர் தொகை அதிகரித்துள்ளதாகவும் இக்காலப்பகுதியில் மதுவிலக்கை மீறும் செயல்களுக்கு பயன்படுத்திய 300 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## பேச்சுவார்த்தை வெற்றிபெற்றால்

## வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படலாம்

கொழும்பு, ஞாயிறு

இனப்பிரச்னை தீர்வுக்காக தற்பொழுது மேற்கொள்ளப் பட்டுவரும் சமாதான முயற்சிகள் வெற்றிபெறுமாகில் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படலாம் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு வேட்பாளர் மனுதாக்குதலுக்கான இறுதித் திகதி நீடிக்கப்படலாம் என்றும் ஆகஸ்ட் 15ந் திகதிநடைபெறவுள்ள 190உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுடன் அல்லது வடக்கு கிழக்கிற்கான தேர்தல் வேறொருதினத்தில் நடாத்தப் படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்துக்கு மேலும் 44 தமிழ் அகதிகள்

(சென்னை)

இலங்கையிலிருந்து மேலும் 44 தமிழ் அகதிகள் நாகபட்டினத்துக்கும், வேதாராணியத்துக்கும் வந்து சேர்ந்துள்ளனர்.

முல்லைத்தீவு, வல்வெட்டித்துறையில் இருந்த இருந்து 4 பேரும் வந்துள்ளனர் என்றும் ஏறகனவே வந்து சேர்த்துள்ள 152 அகதிகளுடன் இவர்களுக்குத் தங்குமிடவசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[வா]

## மீண்டும் கடைகள் இயங்குகின்றன

யாழ்ப்பாணம், திங்

யாழ் பஸ்நிலைய பகுதியிலுள்ள பலகடைகள் வியாபார பணிகளுக்காகமீண்டும் இயங்குகினறன.

நேற்று இப்பகுதியிலுள்ள சிலகடைகள் வழமையான வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

மே மாத இறுதியில் பஸ் நிலையப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான ஷெல் குண்டு வீச்சுத் தாக்குதல்களையடுத்து அச்சம் காரணமாக இக்கடைகள் பூட்டப்பட்டது தெரிந்தே.

### மணிவாக்கு

உண்மையான சமாதானமென்ருல் தீவிர கருத்து வேற்றுமையின்மையை மட்டும் கருதாது. நீதியின சந்நிதானம் இன்றியமையாதது.

—மார்ட்டின் லூதர் கிங்

## நமது நோக்கு

# பத்திரிகையாளரும் பெரும்பயிர் செய்யலாம்

இந்தியாவென்றஅமெரிக்க சிறுநகரில் தங்கியிருந்த பிரமுகர் ஒருவரின் நாய் காணமற் போய்விட்டது.

ஹோட்டல் முதலாளி அவரை அங்குள்ள 'டெயிலி நியூஸ்'பத்திரிகையில் விளம்பரம் போடும்படி சொன்னார்.

அந்தப் பத்திரிகை ஆசிரியர், நிருபர், அச்சக மேஸ்திரி அனைவரும் 'எங்கள் மத்தியில் வந்திருக்கும் பிரமுகர்'' இவரைப் பற்றிய பந்தியை சீர்செய்துகொண்டிருந்தனர்.

'எனது நாய் காணமற் போய்விட்டது'. என்று தம்மை அறிமுகப்படுத்திய பெரியவர் தனது விளம்பரத்தைச் சேர்த்துக்கொள்ளும்படிகேட்டார் ''றெக்ஸ் என்ற பெயருடைய நாய் மான்ஷன் விடுதியிலிருந்து திங்கள் இரவு காணமற் போய்விட்டது. தகவல் தருவோருக்கு, ஐம்பது டொல்லர்'' என்பதே விளம்பரம்.

பத்திரிகை அச்சுக்குப் போய்விட்டது. ஆனல் ''உங்கள் விளம்பரத்தைச் சேர்ப்பதற்கு தாமதிப்போம்'' என்ருர் ஆசிரியர்.

ஹோட்டலுக்குத்திரும்பி வந்த பெரியார் ஒரு சிறு வசனம் சேர்க்கவேண்டியிருந்ததால் பத்திரிகை அலுவலகத்துக்குத் திரும்பிப் போனர்.

ஒரு சிறு வாக்குக்கண்ணுடைய பையனைவிட வேறெவரும் அங்கில்லை. அவனும் அங்குள்ள பெருவயல்வெளியைப் பார்த்த வண்ணம் இருந்தான்.

ஒருவரையும் காணவில்லையே! எங்கு போய்விட்டனர்?

அதே பார்வையில், ''அவர்கள் அனைவரும் நாயைத்தேடிப்போய்விட்டனர்'' என்ருன்.

பணத்தைப்பெற்று விளம்பரத்துடன் நிற்காமல், காணமற்போனதைக் கண்டுபிடித்து அதற்குரிய பரிசைப்பெறுவதிலும் அக்கறை கொண்டனர் பத்திரிகையாளர்.

தாங்கள் பிழைப்பதற்கு மட்டுமல்ல நாடு பிழைக்கவும், காணமற்போன பொருளைக் கண்டுபிடிப்பதில் எங்கள் பத்திரிகையாளர் பெரும்பணி ஆற்றலாம்.

நாட்டின் பெரும்பயிராகிய சமாதானம் சில பல ஆண்டுகளாகக் கருகிப் போய்விட்டது. அதனைச் சீர்ப்படுத்தும் வாய்ப்பு ஒன்று தோன்றியிருக்கிறது

பத்திரிகாயங்களில் தொழில்புரிவதுடன் களத்தில் இறங்கி இதற்கு ஆவன செய்வதில் பத்திரிகையாளர் பெரும்பங்கு கொள்ளலாம்.

இன்று எமது மக்களுக்கு மிக அவசியமானதென்ன? அதனை எவ்வாறு வழங்கலாம்? அதற்குமாருனதை எவ்வாறு தருவிகலாம்?; அனைத்தும் உண்மைக்குப் புறம்பாகாது எவ்வாறு சமைக்கப்படவேண்டும்? இவை அனைத்தையும் நாட்டின் பத்திரிகைகள் கட்டாயம்கடைட்'பிடிக்கவேண்டிய கட்டம் இது

சமாதானம் என்ற உண்மையான பயிர் மீண்டும் அரும்பும்சாத்தியம் உண்டு. வருகிறவாரம் நான்கு வருட ஆயுதப்போராட்டத்துக்கு முடிவுகட்டும் அரிய சந்தர்ப்பம்கிட்டுகிறது. அதனை விரும்பாதவர் இந்தநாட்டில் எவரும் உண்டா? இருப்பின் அவர் எத்தகைய மனிதர் என்பது விளக்கத்தேவையில்லை.

சமாதானம் சடுதியில் வளர்ச்சியடையும் உயிரினம்அல்ல, ஆரம்பத்தில் பெற்றகுழந்தைக்கு உரிய கவனமும் பராமரிப்பும் அவசியம்.

இலங்கையின் இன்றைய சுவாத்தியம் இதற்கு உகந்ததல்ல.

ஹிட்லரின் 'நாஸிசம்' 42 வருடத்துக்குப் பின்னரும் இங்குகாணப்படுகிறது. அதனிலும் மோசமானது பாக்குநீரிணைக்கூடாக சட்டபூர்வமாகவரும் 'நாயரிசம்', இதுபற்றி நாம் முன்னரும் குறிப்பிட்டிருந்தோம்.

நாட்டில் வெளியாகும் தினசரி ஒன்று இந்திய பழம்பெரும் எழுத்தாளர் ஒருவரின் கட்டுரைகளை ஒழுங்காகப்பிரசுரிக்கிறது வாரத்துக்குக்கொருமுறை வெளிவந்த கட்டுரை இன்று அடிக்கடி வரத்தொடங்கியிருக்கிறது.

தென்னிலங்கை வாசகருக்கு இந்தியாவை-இன்றைய பிரதமர் ராஜீவின் ஆட்சியை மிக நுட்பமாகக் கிழித்தெழுதுவது உருசியாயிருப்பதால் அதற்கு உதவுவதேநாம்குறிப்பிடும்'நாயரிசம்.'

சரியோ பிழையோ இந்திய அரசு ஒரு தீர்க்கமான முடிவுக்கு உதவ முன்வந்துள்ளது. இந்த வேளையில்-சமயாசமயம்- என்பார்கள். பிரதமர் ராஜீவுக்கு கல்லெறிவது' பத்திரிகா தர்மமா அல்லது பணம் திரட்டும் கர்மமா?

இலங்கை, இந்தியா மட்டுமல்ல உலகின் பல நாடுகளில் அரச பத்திரிகைகளில் உள்ள பலர் தத்தம் நாட்டைக் கெடுத்துவருகின்றனர்.

இது ஒரு பழைய வியாதி; இதன் ஆரம்பத்தை ஜனதிபதி லிங்கன் ஒரு கதைமூலம்-பலருக்குத் தெரிந்த கதை-குறிப்பிட்டிருக்கிருர்.

கட்டாடியின் கதை அது. அரசனுக்குமுன்னுல் நிறுத்தப்பட்ட கட்டாடி ''ஐயா, மழை வருவது எனக்கொன்றுமே தெரியாது,எனது கழுதையின்காதுஅதனைக் குறிக்கும்'' என்ருன். ''கொண்டுவா அந்தக் கழுதையை; இன்று தொடக்கம் அதுவே எனது மந்திரி.''

''அந்தக் காலம்தொட்டு கழுதைகள் அமைச்சராக அமைவதால் இந்தக் குழப்பம்'' என்ருர் ஜனதிபதி லிங்கன்.

இந்திய ஜனதிபதி-பிரதமர் என்ற கயிறிழுப்பில் பழைய ஜனதிபதி பிரதமர் ராஜீவை வேலை நீக்கம்செய்யலாமென்ற ஹேசியத்தில் எங்கள் பத்திரிகைகள் சில மினக்கெட்டன.

பாக்குநீரிணை ஊடாக வந்த நாயரிசமா அல்லது சட்டத்திற்கு எதிரான 'பயங்கரவாதமா' நாட்டின் சமாதானத்திற்கு உதவி என்பதுபற்றி பிற்காலத்தில் ஆராய்ச்சிக்குரிய விடயமாகலாம்.

இந்த நாடு தப்பிப் பிழைக்கும் சமயம் இன்று தென்படுவதால் நாமனைவரும் என்றுமில்லாத விழிப் புணர்வுடன் இருக்கவேண்டும்.

எதனை நினைப்பது, எதனை மறப்பது? எதனை எழுதுவது, எதனை தவிர்ப்பது?- இன்று மிகமிக அவசியமான நுண்கலை இது.

---

தென்னசியாவில்—

# அரசியல் பிரச்னைகளே பிராந்திய ஒத்துழைப்பிற்குத் தடைக்கற்கள்

''இந்தியாவின் நலன்களுக்கும், அதன் அயல் நாடுகளின் நலன்களுக்கும் பாதிப்பேற்படாத வகையில் நடந்துகொள்ளஇந்தியா எடுத்துவரும் முயற்சிகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் வெற்றியளிப்பதில்லை. தீர்க்கப்படாத அரசியல் பிரச்னைகளும் வெவ்வேறு கொள்கைகளும் பிராந்திய ஒத்துழைப்புக்குத் தடைக்கற்களாயுள்ளன''

இவ்வாறு, முன்னுள் இந்திய வெளிவிவகாரச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் 'இந்தியன் எக்ஸ்பிரஸ் 'சண்டே' பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளில் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன் சாராம்சக் கட்டுரையொன்று இலங்கையின் ஒப்சேவர் பத்திரிகையில் பிரசுரமாகியது. அதன் தொகுப்பு இங்கு தரப்படுகிறது.

அணிசேராக் கொள்கையானது உண்மையில் ஒரு (முழுஅளவிலான) வெளிநாட்டுக் கொள்கையெனக் கருதமுடியாது. வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு பகுதியே அது; வளர்ச்சிக்கான ஒரு வழி அது; இந்த வழியில் நாம்எமது கொள்கைகளை இடையூறின்றி வகுக்கலாம் அத்துடன் வெவ்வேறு பிராந்தியங்களுக்கேற்றவகையில் வெவ்வேறு நாடுகளுக்கேற்ற வகையில்,எமது தேசிய நலன்களுக்கு ஏற்றவகையில் அதனை செம்மைப்படுத்தலாம்.

முதலாவதாக தேசியவாதம் என்ற பதம் இன்னமும் ஒரு சக்திவாய்ந்த அரசியல் சக்தியாக இருந்தாலும் பல மாற்றங்களை அனடந்து வருகின்றது. மேற்குலகில் இந்த தேசிய வாதத்தை விரிவாக்கி மட்டுப்படுத்தப்பட்ட பிராந்திய ஒழுங்கமைப்புகளை நாடும் மனேபாமம் உருவாகி வருகிறது. ஆயினும் பெரும்பாலான 3-ம் உலக நாடுகளைப் பொறுத்தவரையில் தேசியவாதமானது உபதேசியவாதம், இனவாதம், ஆதிவாசிவாதம், பிரிவினைவாதம் என அபாயகரமான நிலைகளாக உடைந்து செல்கிறது.

இரண்டாவதாக, பொருளாதார அபிவிருத்தியில் நாடுகளுக்கிடையேயும், நாடுகளினுள்ளும் உள்ள சமநிலையின்மை வெகுவேகமாகப் பெருகிவருகின்றது. அ-து செல்வந்த நாடுகள் இன்னமும் பெரியசெல்வந்த நிலையையடைகின்றன. வறுமை நாடுகள் மிகவறுமை நிலையை அடைகின்றன இதேநிலைமை ஒவ்வொரு நாட்டினுள்ளும் காணப்படுகின்றது. இந்தநிலையினுல் ஏற்படும் சமுக ஏற்றத்தாழ்வுகள் (சமூ ங்களுக்கிடையே) தொடர்புகள் அறறுப் போவதற்கு வழிவகுக்கின்றது. இதனுல் உள்நாட்டு வன்செயல்களும், வெளிநாட்டு (டனுன) மோதல்களும் ஏற்பட இடமுண்டு.

மூன்ருவதாக ஒருசாதாரண குடிமகன் தனது எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நிச்சயமற்ற நிலை தென்படுவதாக உரை ஆரம்பிக்கும் போது அவன் தன்னுல் கட்டுப்படுத்த முடியாத ராணுவ, அரசியல், பொருளாளதார ரீதியிலான அச்சுறுத்தல்களுக்காளாக்கப்படும்போது மத இயக்கங்கள் உருவாகுவதற்கான காலநிலை உருவாகின்றது.

மக்களின் சாதாரணஅபிலாஷைகள் தடுக்கப்படும் போது அவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர். அல்லது அற்புதங்களை எதிர்பார்க்கின்றனர். இந்த நிலை வன்முறைநிறைந்த அல்லது புரட்சிகரமாற்றங்களுக்கு வழிகோலக்கூடிய அபாயம் உண்டு.

### ஏ. பி. வெங்கடேஸ்வரன்

இதற்குரிய அரசியல் ரீதியிலான பதிலாக நாடுகள் ஒன்றுசேர்ந்து கூட்டமைப்புகளைஉருவாக்கமுயல்கின்றன. ஐரோப்பிய பொருளாதார சமூகம் கொமிகொன், ஏஷியன்,சார்க் போன்ற அமைப்புகள் இந்த மனுேபாவத்தினுல் விளைந்தவை.

### அமைப்புகளில் தளர்வு

ஆயினும் இவ்வாறு அமைப்புச்சேர்ந்திருந்த பல நாடுகள் இவ்வமைப்பின் கொள்கைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதினின்றும் விலகிச் செல்கின்றன. பிரான்ஸ், நோர்டிக்பிராந்திய நாடுகள் இவற்றுக்குச் சிறந்த உதாரணங்கள் அதேவேளை அணிசேரா இயக்க நாடுகளாக விளங்கியவை மேற்கூறிய அமைப்புகளில் ஏதாவதொன்றுடன் ஓரளவு இணைப்பை ஏற்படுத்திக்கொள்கின்றன.

### தென்னசியப் பிராந்தியம்

இந்தப் புதிய மன்றங்கள் எவ்வாறு எமது பிராந்தியத்தை பாதிக்கின்றன வென்பதை நாம்பார்க்கக்கூடியதாகவுள்ளது வடகிழக்கு இந்தியாவில் ஆதிவாசிகளில் கிளர்ச்சிகள் காணப்படுகின்றன. அத்துடன்இந்தியாவின்மிகப்பாரிய உள்நாட்டுப்பிரச்னையாக பிரிவினைவாத காலிஸ்தான் இயக்கம் விளங்குகின்றது.

பாகிஸ்தானில் பிரிவினைவாத சிந்து, பாக்தூன் இயக்கங்கள் பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளன. நேபாளத்தில் கூர்க்கா இனமக்கள்ரம் தேராய் இனத்தவரும் மோதிக்கொள்ளும் அபாயம் உண்டு. பங்களாதேஷில் சிறுபான்மை ஹிந்து மதத்தினர் தாம் 2ம் தர பிரஜைகளாக கணிக்கப்படுவதாகப் புகாரிட்டு இந்தியாவில் தஞ்சமடைகின்றனர். பௌத்தமதத்தவரான சக்மா இனத்தவர்களும் அவ்வரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்கின்றனர். பர்மாவில் சுதந்திர காலம்முதல் பலவித பிரிவினைவாத போராட்டங்கள் அரசுக்கெதிராக இடம் பெற்றுவருகின்றன. இலங்கையில் இனவாத மொழிவாத மோதல்கள் சிவில்யுத்தத்திற்கு வழிகோலும் விளிம்பிலுள்ளன

### இந்திய நிலை

இந்தியா இந்தப் பிரச்னைகளுக்குமத்தியில் உள்ளது. எம்மைச்சுற்றி நடப்பவற்றை நாம் விருப்பு வெறுப்பற்ற நிலையிலிருந்து நோக்க முடியாது.

இலங்கைத் தமிழகதிகள் பாகிஸ்தான் செல்லமுடியாது. பௌத்தர்களான சக்மாக்கள் பூட்டானுக்கு செல்லமுடியாயாது. தோராய் குடிகள் பர்மாவினுள் சந்தர்ப்பம்கோரி நுழையமுடியாது. இவ்வாறு இந்த பட்டியல் தொடர்ந்து கொண்டே செல்கிறது. இதனுல் இந்தியா தனது அண்டைநாடுகளுடன் சுமுகமற்ற உறவுகளை வைத்துள்ளது எனக்கூறல சுலபம், அதேவேளை இப்பிராந்தியத்தில் ஏனைய நாடுகளுக்கிடையிலான உறவுகள் சுமுகமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குரிய காரணம் யாதெனில் இந்நாடுகளில் நேரடியான அயல் நாடுகளாகக் காணப்டுபவை யாதுமில்லை. ஆயினும் இவையனைத்தும் இந்தியாவுடன் எல்லைப் புறங்களைக் கொண்டன. இதனுல் இந்தியா தான் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் இந்நாடுகளை பாதிக்கும் விடயங்களால் தானும் பாதிப்படைகிறது. இது பூகோளரீதியில் விளைந்த உண்மையாகும் இதனைநாம் மாற்றமுடியாது

இந்தியாவின் அயல் நாடுகளில் தத்தமது அரசாங்கங்கள் மீது அதிருப்தி கொண்டுள்ள சிறுபான்மையினங்கள் இந்தியாவிலுள்ள தமதின மக்களிடம் ஆதரவுகோரிநிற்கின்றன. இலங்கைப் பிரச்னையை ஒரு வெறும் வெளிநாட்டுப் பிரச்னையாக இந்தியா கருதமுடியாது. இதுபோலவே பங்களாதேஷுடனுன நீர்ப் பிரச்னையும், அல்லது அஸ்ஸாம்,திரிபுரா மாநிலங்களுக்கு வரும்சக்மா அகதிகளின் பிரச்னையும்.

பாகிஸ்தானிய அரசாங்கம் காலிஸ்தானியர்களுக்கு ஆதரவளித்து வரும் அதேவேளையில் சிந்து, பாக் தூண் இயக்கங்களில் இந்தியாவின் கைபற்றி தீவிர சந்தேகம் கொண்டுள்ளது இலங்கையிலுள்ள தமிழ் சிறுபான்மையினத்துடன் அந்நாட்டு அரசு இணக்கத்துக்கு வரமுடியாமலிருப்பதால் அது இந்திய அரசுக்கும், தமிழ்நாட்டிற்கும் உள்நாட்டு நெருக்குதல்களை உண்டுபண்ணுகிறது. பங்களாதேஷிலிருந்து சிறுபான்மையின மக்கள் வெளியேறுவதை அந்நாட்டு அரசு கட்டுப்படுத்த முடியாததால் அல்லது விரும்பாததினுல் இந்தியாவுக்கு அஸாம் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இத்தகைய

(5ம் பக்கம் பார்க்க)

### துரதிர்ஷ்டம்

''இலாபம் காரணமாக எங்கள் பிள்ளைகளுக்குரிய இவ்வூர் மாம்பழம், வாழைப்பழம், காய்கறி வகை அவர்களுக்குக் கிட்டாமற் போவது துரதிர்ஷ்டமே!மாம்பழத்தை விற்று சிகரட்டை வாங்காதீர். புகைக்கவேண்டுமானுல் எங்கள் புகையிலையை உபயோகியுங்கள்''

கே. சி. தங்கராசா

## தென்னுசியாவில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைகள் சில சமயங்களில் இந்தியாவின் பாதுகாப்புக்குச் குந்தகம் விளைவிப்பதுடன் இல குவில் மறைந்துவிடக் கூடியன வாவும் இல்லை.

### சார்க்

தென்னுசியப் பிராந்தியத்தி லுள்ள நாடுகள் தமக்கிடையே ஐக்கியமாய் வாழ வேண்டும் என்ற உணர்வின் முடிவே சார்க் அமைப்பின் உருவாக்கம் ஆயினும் சார்க் அமைப்பில்மட்டுமே அமைப்பு நாடுகளிடையே தீர்க்கப்படாத எல்லை அரசியல் பிரச்னைகள் காணப்படும் அம்சமும், ஒவ்வொரு நாட்டினதும் நிலைப்பாடுகளும் வித்தியாசப்படும் அம்சமும் காணப்படுகின்றன. இதனுல் 'சார்க்'ஒரு அரசியல் ரீதியான கூட்டமைப்பாகுதற்கான சாத்தியக்கூறுகள் அரிதாகவே காணப்படுகின்றன. மாருக இவ்வமைப்பின் சிறு நாடுகள் மேற்கொள்ளவிரும்பும் நடவடிச்கைகளுக்கும், இந்தியாவின் கேந்திர தேவைகள் நிலைப்பாடுகளுக்கும் இடையில் ஒரு பதற்றநிலை தோன்றக் கூடும் உதாரணமாக,வடபகுதி நாடுகளை இணைக்கும் சார்க் போக்குவரத்து நெடுஞ்சாலை எமது மேற்கு, கிழக்கு எல்லைகளை ஊடறுத்துச் செல்லும். தற்போதுள்ளதிலும் பார்க்க இன்னும் சுமுகமான அரசியல் உறவுகள் இவ்வமைப்பு நாடுகளிடையே நிலவினுலே இவை சாத்தியப்படும். இதனுல் இந்தியாவின் அயல்நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்த சார்க் கைப்பயன்படுத்தும் அதே சமயம் இவ்வமைய நாடுகளுக்கிடையேயான பொருளாதார வர்த்த ஒத்துழைப்பையும் சார்க்கின் எல்லைக்குள் கொண்டுவராவிடின் இவ்வமைப்பிலிருந்து அதிகம் பயனை எதிர்பார்க்க முடியாது.

பாகிஸ்தான் மீது இந்தியா கொண்டுள்ள வெறுப்பூட்டும் கொள்கைகளை விரைவில் மாற்றிக் கொள்ளவேண்டும். இத்தகையதொரு கொள்கை இந்தியாவை, இந்தியரின் கௌரவத்துக்கு அருகில் கூட வரமுடியாத நாட்டின் நிலைக்கு தாழ்த்தி விடும். அதேவேளை பாகிஸ்தானை விட சிறிதான அயல் நாடுகளுடன் எமது நலன்கள் பாதிக்கப்படாவண்ணம் பெருந்தன்மையுடனும் அத்தவேளை உறுதியாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

### இலங்கை

83ம் ஆண்டு வரையில் இந்தியாவின் கரிசனைகளைக் கருத்திற் கொள்ளும் என நம்பக்கூடியதாக விருந்தநாடு இலங்கையாகும். துரதிர்ஷ்ட வசமாக 83க்கலவரங்களும்தொடர்ந்து தமிழர் கிளர்ச்சி தீவிரமாகியதும் எம்மை (அங்கு) மிகவும் ஆழப்புதைத்துவிட்டன இதிலிருந்து இந்தியாவை விடுவிக்க இந்திய அரசினுலோ அல்லது இலங்கையினுலோ முடியவில்லை எமது உறவுகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளன. ஆயினும் ஏதாவதொருவழியில் தமிழர் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் இவை அபிவிருத்தியடைவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இலங்கையில் சகஜநிலை திரும்ப இந்தியா ஒயன்ற அனைத்தையும் செய்யவேண்டும்

இல. தமிழர் அபிலாஷைகள் எந்தளவுக்குத் நிறைவேற்றப்படலாம் என்பது இன்னமும் நிச்சயமற்ற நிலையில் உள்ளது. ஒரு உடன்பாடொன்றை காண இரு பகுதியினரிடையேயுமுள்ள மிதவாதிகளுக்கு உற்சாகமளிக்கவேண்டும். அதேவேளை தமிழ் சிங்கள தலைவர்களிடையே 57 60. 65ம்ஆண்டுகளில் எட்டப்பட்ட உடன்பாடுகள் சிங்கள எதிர்ப்பினுல் கௌரவிக்கப்படாததையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் எட்டப்படும் உடன்படிக்கைக்கும் அதே நிலைமை ஏற்படலாம். அப்படி நேரும் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் நலன்கள் எதிலிருக்கும் என்பதனை நாம் நடைமுறை ரீதியில் பரிசீலனை செய்யவேண்டும்.

இந்தியா ஒரு பெரும் கடலாதிக்க நலன்கள் உள்ள நாடாக அபிவிருத்தி அடைந்து வருகிறது. இந்நலன்கள் எமது ஆழ்கடல் எண்ணெய் கைத்தொழிற்றுதுறை, ஆழ்கடல் மீன்பிடிக்துறை, ஆழ்கடல் வளங்களைப்பயன்படுத்துவதில் எமது ஈடுபாடு, சர்வதேச வர்த்தகத்தில் எமது சார்பு நிலைமை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. அதாவது, எமது கடற் பிராந்தியத்தையும் கடலாதிக்க நலன்களையும் நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை நாம் மேற்கொள்ளும்போது, எமது அயல்நாடுகளின் வெளிப்படையான அல்லது மறைமுகமான ஆதரவுடன் இப்பிராந்தியத்தில் நடமாடும் வெளிச்சக்திகளுடன் மோத வேண்டி ஏற்படலாம். இந்த நிலைமைகளை எதிர்கொள்ளத் தேவையான அரசியல், ராணுவ ரீதியிலான சக்தி எம்மிடமில்லை. இதற்காக நாம் புதிய கொள்கைகளையும், தந்திரோபாயங்களையும் நாம் வகுத்துக்கொள்ள வேண்டும்.

(தொகுப்பு - ஸேனு)

## 1000 தொன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஆயிரம் தொன் உணவுப் பொருள்களுடன் துறைமுகத்தை வந்தடைந்துள்ள இந்தக்கப்பலில் இருந்து உணவுப் பொருள் இன்று இறக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (வா)

## அச்சுவேலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யேறி ஆவரங்கால் சிவன் கோவிலில் அன்றைய இரவை கழித்துவிட்டு நேற்றுக்காலை தமது வீடுகளுக்குத் திரும்பினர்.

வளலாய் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அச்சமயம் அச்சுவேலியில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த பத்தமேனி பாரதிவீதியைச் சேர்ந்த சரவணமுத்து தயாபாரன் (1½ வயது) சரவணமுத்து இராசகிளி [வயது 35] விஜயரட்ணம்தேவி [வயது 38] சந்திரகுமார் [10 மாதம்] ஆகியோரும் துன்னந்தையைச் சேர்ந்த கதிர்காமு செபஸ்ரியன் [வயது 64] என்பவரும் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குட்லக், வேல்விலாஸ் ஆகிய கடைகள் மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளன. அச்சவேலி லிபேட்டி திரை அரங்கும் சேதமுற்றது. (கு)

## யாழ். போதன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான 19-ம், 9-ம் வார்ட்டுக்களைத்தவிர ஏனைய வார்ட்டுக்களில் நோயாளர்கள் பெருமளவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறுர்கள். 16-ம் வாட், 8-ம் வார்ட் மற்றும் சில வார்ட்டுகளில் நோயாளர்கள் நிலத்தில் விரிப்புகளில் படுத்திருந்து சிகிச்சை பெற்று வருவதையும் அவதானிக்க முடிந்தது.

ஷெல் தாக்குதலுக்கிலக்கான 22-ம், 24-ம் (குழந்தைப் பிள்ளைகள் வாட்டுகளில் தற்போது அதிகளவில் குழந்தைப் பிள்ளைகள் சிகிச்சை பெற்றுவருகிறுர்கள்.

வெளி நோயாளர் சிகிச்சை பிரிவிலும் சிகிச்சை பெறும் நோயாளர் தொகை அதிகரித்துள்ளது. (வா)

## புதிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் பல்வேறு அமைப்புகளின் ஆதரவை திரட்டும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் திரட்டும் ஆதரவுடன் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திட இலங்கை வரும் இந்திய பிரதமரின் விஜயத்தின் போது தமது பலத்த எதிர்ப்பை தெரிவிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடவுள்ளனர்.

கடந்த சில தினங்களில் இக்கட்சியினர் அஸ்கிரிய, மல்வத்த மகாநாயக்க தேரோக்களை சந்தித்துள்ளனர்.

'தார் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக கைச்சாத்திடப்படும் வடச்கு-கிழக்கு இணைப்பு ஒப்பந்தத்தை இருபத்திநான்கு மணிநேரத்துள் கிழித்தெறியப்படும் என்று திரு. அநுரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதமர் பதவி அமைச்சர் காமினி திஸநாயக்காவிடம் ஒப்படைக்கப்படவிருக்குறது. திரு. பிரேமதாஸாவின் நிலை பற்றி தெரியவில்லை வடக்கும் கிழக்கும் பிரபாகரனிடம் ஒப்படைக்சப்படவிருக்கிறது என்றும் அவர் கூறினுர்.

இக்கூட்டத்தில் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்ததாவது:- "எமது நாட்டைக் காக்கும் நேரம் வந்துவிட்டது பிக்குகள் வீதிகளில் இறங்கிபோரகும் நேரம் இதுதான் வடக்கு-கிழக்கு இணைப்பை திரு பிரேமதாஸா ஒரு போதுமே விரும்பியதில்லை. இவ்விடயத்தில் பிரதமர் உறுதியாக நிற்பாரேயானுல் அவருக்கும் வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பாத அரசு உறுப்பினர்சளுக்கும் சுதந்திரக்கட்சி பூரண ஆதரவு வழங்கும் என்றுா.

இதேவேளை முன்னுள் அரசாங்க அமைச்சரான திரு. சிறில் மத்யூ கருத்து வெளியிடுகையில்; இப்புதியயோசனையை அமுலாக்க ஜே ஆர். அரசு மூன்று நான்கு வருடங்களுக்கு முனபே தீர்மானித்து விட்டதாகவும் இதன் மூலம் நாம் இந்தியாவிற்கு அடிமையாவதாகவும்,தெரிவித்தார். (சி)

## பிரேமாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


ஜனுதிபதி இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக பிரதமர் வெளிநாட்டில் இருந்தபோது இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகள்குறித்து பிரதமரிடம் விளக்கமளித்தார்

இவ்விளக்கத்தையடுத்து பிரதமரும் தமது அபிப்பிராயங்களை ஜனுதிபதியிடம் தெரிவித்தார். அத்துடன் இந்த உடன்படிக்கைகள் குறித்து தமது யோசனைகள் சிலவற்றையும் அவர் வெளியிட்டார்.

ஜனுதிபதி அவற்றைச் செவிமடுத்தபின்னர் பிரதமரின் யோசனைகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்என்று தமது அலரிமாளிகைச் சந்திப்பின் பின்னர் கருத்துவெளியிட்டார்.

ஆனுல் அந்த யோசனைகள் என்ன என்பது பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
ஆறுமுகம்
பொன்னையா

மலர்வு: 22-10-1937
அமரத்துவம்:28-06-1987
வீட்டுகிருத்தியம்:
28-07-1987

அன்பின் திருவுருவாய், பாசத்தின்பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய் திகழ்ந்த எங்கள் குடும்பத் தலைவனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னுரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றூர் உறவினர்க்கும், இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கட்கும், பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரியைகளுக்கும், மாணவ, மாணவிகட்கும், நண்பர்கட்கும், அனுதாபச்செய்தி அனுப்பியும், ஆறுதல் செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம். 28-07-87 செவ்வாய்கிழமை 11 மணியளவில் சபிண்டீகரணக் கிரியை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றூர், உறவினர், நண்பர்களையும் சமூகம் தருமாறு அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
தாய், மமான்.
176, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 5 400

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

தங்களை கைவிடுவதில் இவர்சள் விடுதலையும் தொடர்புபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முகாம்கள் மூடப்படும்

இதேவேளை வடபகுதியில் புதிதாகப்போடப்பட்ட இராணுவ மினிமுகாங்கள் மூடப்படுமெனத் தெரிவிச்கப்பட்டுள்ளது. வடமராட்சியிலுள்ள முகாங்களும் இவற்றிலடங்கும்.

குருநகர், ஆனையிறவு, பலாலி, தலைமன்னுர், வல்வெட்டித்துறை, முகாங்கள் தொடர்ந்தும் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீர்வு குறித்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் திரு. ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.


"இலங்கையிலிருந்து இனப்பிரச்னை தொடர்பாக தற்போது பல செய்திகளும், தகவல்களும் வந்துகொண்டிருக்கின்றன. அவை குறித்து நாம் தீவிரமாகவும் விரிவாகவும் ஆராயவேண்டும் அத்துடன் அவற்றைப் பரிசீலித்து வருகிறோம் என்றும் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதுடில்லியில் இந்திய அதிகாரிகளுக்கும், இலங்கை தமிழ் பேராளிகள் குழுக்களுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்று புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிராபாகரனுடன் இந்திய அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து ஏனைய குழுக்களுடனும் பேச்சு நடத்துவதற்காக புதுடில்லி வருமாறு ஏனைய நான்கு இயக்கங்களுக்கும் புதுடில்லியிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சிலஇயக்கப் பிரதிநிதிகள் ஏற்கனவே புதுடில்லி விரைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவஞ்சலி

4-ம் ஆண்டு



ந. நவரத்தினராசா
(தொழில்நுட்ப அலுவலர்,
கண்டி).
தோற்றம்: 05-06-1953
மறைவு: 27-07-1983

3-ம் ஆண்டு



ந. ருக்மணி
தோற்றம்;
09-02-1961
மறைவு:
28-07-1984

2-ம் ஆண்டு

திருமதி க. இலட்சுமிப்பிள்ளை

தோற்றம்: 28-05-1912 மறைவு: 12-12-1985

நினைவுகள் நிழலாக நீங்கள் மறைந்தாலும் நீசரின் கைப்பிடியில் அண்ணு உன் நிஜவாழ்வு முடிந்தாலும் மனதளவில் உங்களை நாம் மறந்ததில்லை எந்நாளும் மாய்கின்றோம். உங்கள் மறுவாழ்வுக் கேங்குகின்றோம்.

உங்கள் நினைவுகளால் கரைந்துருகி, நித்தமும் கண்ணீர் சிந்தி உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்.

அன்பு
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்.

ஊரிக்காடு, முள்ளியான், பளை. (சி-0061)


## கடைசி நேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2 துவிச்சக்கரவண்டிகள் விற்பனைக்குண்டு [Eastern] தொடர்பு. "ஞானோதயம்" குளுக் கண்டிலேன், கட்டப்பிராய். (சி-0057)

### தேவை

நல்ல நிலையிலுள்ள உருத்திர வீணை தேவை. தொடர்பு: ஆ ஞானசேகரம், 56,அரசடி வீதி, யாழ்ப்பாணம். (சி-0059)

# "கல்லூரி வளர்ச்சி அபிவிருத்தியில் பெற்றோர் பங்கு அவசியம்"

## – அருட்திரு அன்டன் இராசநாயகம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

"எமது கல்லூரியில் ஆசிரியர் பற்றுக்குறை ஒரு முக்கிய பிரச்னையாக இருக்கின்றது இதனுல் வசதிக்கட்டணத்தில் ஆசிரியர்களை நியமிக்கவேண்டியநிலை ஏற்படுகின்றது

"வசதிக் கட்டணத்திலும், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியிலிருந்தும் இந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதால் கல்லூரியின் இதர தேவைகளுக்கு நிதி கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. கல்லூரி வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் பெற்றோர் பங்களிப்பு அவசியம்"

இவ்வாறு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளார் குறிப்பிட்டார்.

கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்தொகையான பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். கூட்ட ஆரம்பத்தில் அண்மையில் தமிழ்நாட்டில் சென்னை நகரில் மறைந்த முன்னுள் ஆசிரியரும், முன்னுள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளருமான திரு. குமாரின் மரணத்திற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளார் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"யாழ் மாவட்டத்தில் புதிய ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படுவதில்லை. வெளி மாவட்டங்களில் கடமையாற்றிய பின்பு இங்கு இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்கள் தங்கள் வீடுகளுக்கு சமீபத்தில் உள்ள பாடசாலைகளுக்கே இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுகின்றூர்கள். இதனுல் பல கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் கிடைக்காது போய்விடுகின்றது. வசதிக் கட்டணத்தில் கறபிக்கும் ஆசிரியர்கள் மிகவும் குறைந்தளவு சம்பளமே பெற்றுவருகின்ற போதிலும் அவர்கள் தங்கள் கடமையை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றனர். அடுத்த வருடம் நடைபெறவிருககும் க. பொ. த. சாதாரணப் பரீட்சையிலும் பல மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன. பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டிருப்பதோடு பரீட்சையில் பாடங்களுக்கு புள்ளியிடுவதிலும் புதியமுறை புகுத்தப்பட்டுள்ளது. பாடசாலைக்கு ஒழுங்காகச்சமுகமளித்து வீட்டுப் பாடங்களை கவனமாக செய்தால் மட்டுமே இந்த பரீட்சையில் சித்திபெறமுடியும். ரியூட்டரிகளை அதிகமாக நம்பி அந்தக் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கும் மாணவர்களுக்கு இந்த புதிய மாற்றம் அதிக பாதிப்பை ஏற்படுத்தும், கல்லூரி படிப்புக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் புதிய பாடத்திட்டமும் புள்ளியிடுதலும் அமைந்துள்ளன. ஆகவே பெற்றோர்கள் இதில் அதிக கவனம் செலுத்தவேண்டியது அவசியம்".

சங்க உபதலைவர் திரு. ஜி. எஸ். அந்தோனிப்பிள்ளை உட்பட மற்றும் பலர் உரையாற்றினுர்கள்.

சங்கத் தலைவராக கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளும், செயலாளராக திரு கி. ஜோசவ்வும், பொருளாளராக ஆசிரியர் திரு க. இராசநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

# அமரர் தங்கராசாவுக்கு

## அதிபர்கள் சங்கம் அஞ்சலி

"யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் இன்று பெற்றோர் ஆசிரியர்மாணவர் விரும்பிப்படிக்கும் தினசரி ஈழநாடு என்பதற்கு அமரர் கே. சி. தங்கராசா எடுத்த முன்னேடி நடவடிக்கைகளை தமிழ்கூறும் நல்லுலகம் ஒரு போதும் மறக்க முடியாது. இதுகாறும் ஒரு யாழ்ப்பாணத்தவர் செய்யமுடியாத சாதனை இது".

இவ்வாறு விக்ரோறியா கல்லூரி அதிபரும் யாழ். கல்லூரிகளின் அதிபர் சங்கத்தலைவருமான திரு கே. அருணுசலம், அமரர் கே. சி. தங்கராசா மறைவு குறித்துவிடுத்துள்ள அஞ்சலிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"பெற்றோர் பிள்ளைகளைக் கொண்டும் ஆசிரியர் மாணவரைக் கொண்டும் இப்பத்திரிகையை தம் முன் வாசிக்க எவ்விததயக்கமிருக்காத வகையில் அதில் காணப்படும் செய்திகள், கட்டுரைகள், கருத்துக்கள் அமைந்திருப்பதால் நூலகவாசிப்புக்கு மட்டுமல்ல வகுப்பறைப் படிப்புக்கும் இப்பத்திரிகைபயன்படுகின்றது. ஸ்தாபகர் கே. சி தங்கராசா இட்ட அத்திவாரம் கல்விக்குரிய தினசரி என்ற கணிப்புப் பெற்றிருக்கிறது.

"பாடசாலைகளில், ஆசிரியசங்கங்களில், அதிபர் சங்கத்தில் எழும்பிரச்னைகள் சிக்கலடைந்த வேளையில்சமாதானத்தைப்பேண இப்பத்திரிகை உதவி வருவதை நானறிவேன் இதற்கும்தோன்றுத்துணையாகஇருந்தவர் நிறுவனத்தின் தலைவர் என்பது எங்கள் சங்கத்தின் நேரடி அனுபவம்.

"அன்னுர் எழுப்பிய கலைக்கோயில் கல்வீக்து தொடர்ந்து நற்பணி ஆற்றுவதே அவர் நாமம் என்றும் வாழ தகுந்த வழியாகும்"

★

### யாழ். இந்துக் கல்லூரி அதிபர் எஸ். பொன்னம்பலம் கல்லூரி சார்பாக வழங்கிய

# இரங்கற் செய்தி

எங்கள் கல்லூரி தன்னுடைய புகழ்பூத்த புதல்வர் ஒருவரை இழந்து தவிக்கிறது. கொழும்பு பழைய மாணவர் கிளையின் உபதலைவராகத் தொண்டாற்றிய அமரர் தங்கராசா கல்லூரியின் பொன் விழா 1940-41ல் கொண்டாடியபோது, அதற்கு உதவிய வரலாறு, அவர் தம்மை வளர்த்த பாடசாலையில் கொண்ட அன்பையும் மதிப்பையும் காட்டுகிறது.

1968ல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கே. சி. ரியை அறிமுகப்படுத்திய அன்றைய அதிபர் என். சபாரத்தினம், "குடும்பம் என்ருல் திரு. தங்கராசாவின் பரந்த மனப்போக்கில், கம்பனி, கோப்பரேஷன், கம்மியூனிட்டி என்று 3 'சி'களில் குறிப்பிட்டார். அவர் நிகழத்திய பேருரை பற்றி பல பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கம் தீட்டின

இத்தகைய பெரியார் வருடா வருடம் எங்கள் பரிசளிப்பு விழாவில், தமது மாமனுர் சிறீலசிறி முத்துக்குமாரத் தப்பிரான் சுவாமிகள், தமது தகப்பனுர் கந்தப்பிள்ளை சிற்றம்பலம், தாயார் தையல்நாயகி சிற்றம்பலம், சிவகாமித் தாய் பரிசு, தம்பிரான் சுவாமிகள் நினைவாகவும் வழங்கிவந்தார்.

முன்னேரை வணங்குவதோடு இக்காலச் சமுதாயத்தையும் இனிவரும் சந்ததியினரையும் கருத்தில் கொண்டு செய்த தொண்டுகள் பல. அவற்றுள் எம் கண்முன்னிற்பது ஈழநாடு.

யாழ். இந்துக் கல்லூரி தனது நூற்றுண்டு நிறைவில் அவருடைய நாமம் வாழ ஆவன செய்யும்.

---

# அரச அதிபர் பாராட்டு

[கிளிநொச்சி நிருபர்]

உருத்திரபுரம் கொத்தணி அமைப்பின்மூலம் இப்பகுதி மாணவர்கள் முன்னேற்றம் கண்டுவருவது பாராட்டுக்குரியதாகும். இவ்வமைப்பின் மூலம் கல்வி பயிலும் மாணவர்களின் எதிர்காலம் சுபிட்சம் மிக்கதாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை இன்றைய விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்காகவும் சிறப்பான வகையிலும்அமைந்திருந்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்".

இவ்வாறு உருத்திரபுரம் கொத்தணிப் பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப்போட்டியின் போது பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கே. தேவசிகாமணி குறிப்பிட்டார்.

உருத்திரபுரம் கொத்தணி அதிபர் பொன் சபாபதி தலைமையில் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய விளையாட்டரங்கில் மேற்படி போட்டிகள் நடைபெற்றன.

உருத்திரபுரம் கொத்தணி பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்களிற்கிடையேயான போட்டியில் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் முதலாவது இடத்தையும், உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் இரண்டாவது மூன்ருவது இடத்தையும் பெற்றன.

புனித பற்றிமா பாடசாலை அதிபர் சங். சகோதரி கொஸ்கா கிளிநொச்சி கொத்தணி அதிபர் என். சோதிநாதன் ஆகியோரும் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

பரிசில்களை விஞ்ஞான கல்வி அதிகாரி கமலநாதன் வழங்கினுர்.

---

### புலிகளிடம் கைதிகளாகவுள்ளபடையினரைப் பார்க்க

# பெற்றோர் வவனியா பிக்குவுடன் இன்று யாழ் நகர் வருகின்றனர்

(வவனியா நிருபர்)

யாழ்பபாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கைதாகியுள்ள 12 படையினரையும் பார்ப்பதற்கு வவனியா விகாராதிபதி சியம்பலகஸ்வலவிமலசார தேரோவுடன் அவர்களின் பெற்றோர் இன்று அதிகாலை வவனியாவிலிருந்து புறப்படுகின்றனர்.

தனியார் பஸ் ஒன்றின் மூலம் யாழ். வரும் இவர்களுடன் மேலும் சில பௌத்த பிக்குகளும் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வோதய இயக்க முக்கியஸ்தர்களும் இக்குழுவுடன் வரவுள்ளனர்.

அத்துடன் உள்நாட்டு பத்திரிகையாளர்களும்வரத்திட்டமிட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி புலிகளிடம் கைதியாகவுள்ள 12 படையினரையும் பார்ப்பதற்கு அவர்களின் பெற்றோர்கள் வவனியா பிக்குவுடன் தொடர்புகொண்டு தம்மை யாழ். அழைத்துச் செல்லுமாறு பல தடவை வற்புறுத்தியிருந்தனர்.

அதன் பிரகாரம் வவனியா பிக்கு யாழ். வருவதற்கு புலிகளிடம் அனுமதிகேட்டிருந்தார் யாழ் வருவதற்கு புலிகள் அனுமதி வழங்கியிருந்தனர்.

இவர்களின் யாழ் விஜயத்தின்போது அண்மைக்காலத்தில் அங்கு நடைபெற்ற இராணுவ தாக்குதலினுல் ஏற்பட்ட சேதங்களை நேரில் சென்று பார்வையிடுவார்கள் என தெரியவருகின்றது.

யாழ். பெரியாஸ்பத்திரிக்கும் சென்று இராணுவ ஷெல் தாக்குதலினுல் பாதிக்கப்பட்ட இடங்களை இவர்கள் பார்வையிடுவர்.

---

### கடற்படையால் கைதுசெய்யப்பட்ட

# 34 தமிழ் இளைஞர்கள் அரச அதிபர் முன் விடுதலை

(எம். வாமதேவன்)

இலங்கைக் கடற்படையினரால் கடலில்வைத்து கைதுசெய்யப்பட்ட 42 தமிழ் இளைஞர்களில் 34 பேர் 46 நாட்களுக்குப்பின் யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் முன்னிலையில் தத்தம் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் வழியில் கடற்படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை ஹாபர் வியூ இராணுவமுகாமில் ஆறு நாட்கள் தடுத்துவைக்கப்பட்டனர்.

அங்கு நடைபெற்ற விசாரணைகளின் பின் பலாலி இராணுவமுகாமிற்கு இவர்கள் அனைவரும் அனுப்பப்பட்டு சுமார் 40 நாட்கள்வரை அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

பலத்த விசாரணைக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பின்னர் இந்த முப்பத்திநான்கு பேரும் இ. போ ச. பஸ் ஒன்றின்மூலம் இரண்டு தமிழ் பொலிசார் பொறுப்பில் வடமராட்சிக்கு அனுப்பப்பட்டனர்.

பலாலியிலிருந்து 34 பேருடன் புறப்பட்ட இந்த பஸ் தெல்லிப்பழைவரை வந்து அங்கிருந்து தொடர்ந்து வடமராட்சி செல்லமறுத் இளைஞர்கள் பின்னர் அரச அதிபரிடம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். அரச அதிபரிடம் கொண்டுசெல்லப்பட்ட பின் அந்த அரச அதிபரிடம் தாம் பெற்றோரிடம் செல்வதாகக் கடிதம் எழுதிக்கொடுத்துவிட்டு சென்றுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட இந்த இளைஞர்கள் புலோலி, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், கொல்லங்கலட்டி ஆகியஇடங்களைச் சேர்ந்தவர்களாவர்.

---

# இறந்ததாகக் கருதப்பட்டவர் நேற்றுமுன்தினம் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

நெல்லியடி இராணுவமுகாம் தாக்குதலின் போது தடுப்புக் காவலிலிருந்து இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த ஜெயதேவன் என்பவர் நேற்றுமுன்தினம் இராணுவத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

நெல்லியடியில் இராணுவ ரோந்தின் போது கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படடிருந்த இவர் நெல்லியடி முகாம் தாக்குதலுக்கு தலுக்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக மந்திகை முகாமிற்கு மாற்றப்பட்டார்.

இம்முகாம் தாக்கப்பட்ட போது இவரும் இங்குதான் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்ற சந்தேகத்தில் இவரது உறவினர்கள் இவரை இறந்துவிட்டதாக அஞ்சிக்கொண்டிருந்தனர்.

மந்திகை முகாமிலிருந்து வசாவிளான் முகாமிற்குக் கொண்டு வரப்பட்ட இவர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டார்

விடுதலையாகி வந்த இவரை பெற்றோர்கள், உறவினர்கள் ஆரத்தழுவி முத்தமிட்டு வரவேற்றனர். (ஒ)

---

# அகதிகளுக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி இந்து மாமன்றம் இடம்பெயர்ந்த அகதிகள் புனர்வாழ்வுக்காக 810 ரூபாவை வட்டுக் கிழக்கு தாவளை தமிழ் கலவன் பாடசாலையில் தங்கியிருக்கும் வடமராட்சி அகதிகளுக்கு அன்பளிப்புச் செய்தது.

இவ்வன்பளிப்பை இந்து மாமன்றத் தலைவர் வ. யோகானந்தசிவம், வட்டுக்கோட்டை பிரஜைகள் குழுத் தலைவரும் முன்னுள் விக்ரோறியாக் கல்லூரிஅதிபருமான திரு. ந. சிவஞானத்திடம் கையளித்தார்

வட்டுக் கிழக்கு தாவளை-தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எஸ். ஆறுமுகசாமியும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டார்.

---

# தனிச்சிங்களத்தில் நியமனக் கடிதம்

வேலணை, நிருபர்

யாழ். மாவட்டத்தில் விசேட சேவை அலுவலர்களாக கடமையாற்றி பின் தற்பொழுது கிராம சேவையாளர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ள 78 பேருக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரினுல் நியமனக் கடிதங்கள் கடந்த 22ம் திகதி யாழ். கச்சேரியில் வைத்து வழங்கப்பட்டன.

அரசாங்க அதிபரினுல் கொடுக்கப்பட்ட இந்த நியமனக் கடிதங்கள் யாவும் தனிச் சிங்கள மொழியிலேயே உள்ளனவாம்.

# இந்திய மருந்து வகைகள்

## ஆஸ்பத்திரிகளுக்கு விநியோகம்

பலாலி, ஞாயிறு

யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பிரிவால் தனியார் லொறி வாடைக்கு அமர்த்தப்பட்டு இந்தியா அன்பளிப்பு செய்த மருந்து வகைகள், வைத்தியசாலைகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

இதுவரை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலை, காரைநகர் அரசினர் வைத்தியசாலை, அளவெட்டி அரசினர் வைத்தியசாலை,பளை அரசினர் வைத்தியசாலை, தொல்புரம் அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை,இணுவில் அரசினர் வைத்தியசாலை, உடுவில் அரசினர் வைத்தியசாலை, சுன்னாகம் அரசினர் வைத்தியசாலை ஆகியனவற்றுக்கும் வழங்கப்பட்டுள்ளது

மேலும் ஏனைய வைத்தியசாலைகளுக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

யாழ். மாவட்ட மத்திய மருந்தகப்பொறுப்பாளர் திரு. சி.கந்தசாமி பொறுப்பில் இம்மருந்து விநியோகம் நடைபெறுகிறது.

### புறக்கோட்டை குண்டுவெடிப்பு

## 5 இளைஞர்கள் பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர்

(கொழும்பு)

புறக்கோட்டை குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 4 தமிழ் இளைஞர்களும் முஸ்லிம் இளைஞர் ஒருவரும் பலத்த பாதுகாப்புடன் கோட்டை நீதி மன்றத்தில் கடந்த புதன் கிழமை ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களில் 16 வயதான தமிழ் இளைஞரும் அடங்குவார்.

இச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரும் முஸ்லிம் இளைஞர் ஒருவரும் காரைநகரைச்சேர்ந்த இளைஞர் ஒருவரும் மற்றுமிரு தமிழ் இளைஞர்களும் கடந்த சில மாதங்களுக்கு முன் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்

மேலதிகவிசாரணைகளுக்காக இவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது. (சி)

## யாழ்.-வவனியா வீதி திருத்துவதில் தாமதம்

யாழ்ப்பாணம்,திங்கள்

வவனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான கண்டிவீதி திருத்துவதற்கென இவ்வாண்டு எழுபத்தைத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தும் இவ்வீதி திருத்தி முடிக்கப்படுவதில் பெரும் தடைகள் ஏற்பட்டுள்ளன. கடந்த பல மாதகாலமாக செப்பனிடும் வேலைகள் இடம் பெறவில்லையெனவும் தெரியவருகிறது.

வவனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையும் ஆங்காங்கே பல லட்சரூபா பெறுமதியான கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. இக்கற்களை இப்பொழுது புற்கள் மூடியுள்ளன.

மழைக்காலம் நெருங்கிக் கொண்டிருப்பதால் அதற்கு முன் இவ்வீதி திருத்தப்படவேண்டும்இல்லையெனில்மழை காலங்களில் இவ் வீதியால் வாகனங்கள் செல்லமுடியாத அளவிற்கு பள்ளமும் மேடுமாக இருக்கும் என்று வாகனச் சொந்தக்காரர்கள் எமது நிருபரிடம் தெரிவித்தனர். (ஒ)

## இன்றைய பலன்

மாதம்; ஆடி
திகதி; 11 [1987-07-27]
கிழமை; திங்கள்
திதி; துதியை
நக்ஷத்திரம்: ஆயிலியம்
மு. இ. வரை

மேடம்: தொழில் புரியும் இடத்தில் குறைகேட்க நேரிடும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும், எதிர்பார்த்த விடயத்தில் சுமுகமான நிலைதென்படும்.

இடபம்: பொருள்வரவுபெரியோர் உதவி சகோதரசுகம் இவற்றுடன் வரவேற்கத்தக்க செய்திக்கும் இடமுண்டு.

மிதுனம்: அன்னியர் வாசப் ஆபத்தில் மாட்டிவைக்குப் எண்ணித்துணியும் விடயங்களில் தடையும் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு.

கடகம்: வாய்வுக் கோளாறினால் அவஸ்தைப்பட நேரும், உணவு விடயத்திலும் சுகாதாரம் வேண்டும், மக்கள் மத்தியில் மதிப்புக்கும் இடமுண்டு.

சிங்கம்: நண்பர்கள்மூலம் குறைகளுக்குமிடமுண்டு, மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்களும் ஏற்படலாம், இன்று நாவடக்கம் நன்று.

கன்னி: ஆசாரக் குறைவிற்கும் ஆத்திரப்படவும் இடமுண்டு. சகோதர வழியால் சஞ்சலப்பட நேரிடும். இன்று அமைதியே நன்று.

துலாம்: வாகனச் சாரதிகளுக்கு அவதானம் வேண்டும். வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும். தாய் வழிச்சுகமும் உண்டு.

விருச்சிகம்: இனத்தவரின் ஆதரவுண்டு, நீண்டநாள் பயணம் குறித்து திட்டமிடப்படலாம், புகழ்வரும் காரியங்களிலும் ஈடுபடுவீர்கள்.

தனுசு: கருத்தினில்மோசம், வாட்டிடும் பிணியும்தானே மிகையான போக்கினால் மனதும் பாழாய் போகும், பகைமூட்டம் தோன்றும்.

மகரம்: குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இறுக்கும், செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும், காதல்விவகாரங்களுக்கும் இடமுண்டு.

கும்பம்: மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று அம்பலத்திற்கு வரலாம், குடும்பத்தில் குறைகேட்க நேரும், நண்பர்களும் காலைவாரிவிடுவர்.

மீனம்: நல்லதைச் செய்வீர்கள். பிரமுகர்கள் உங்களை தேடிவருவார்கள், சமூகத்திலும் மதிப்பு உயரும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## தட்டுப்பாடு

பலாலி, ஞாயிறு

யாழ் மாவட்டத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பபடிவத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவம் எந்த இடத்திலும் பெற முடியாதிருக்கின்றது

விண்ணப்பப் படிவம் சில இடங்களில் 25 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறதாம்.

## உற்சவம்

(மண்டைதீவு)

மண்டைதீவு புனித பேதுரு வானவர் ஆலய வருடாந்த உற்சவம் 23-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 1-ம் திகதி இவ்வாலய திருச்சுருவ சுற்றுப் பிரகாரம் வழமைபோல் நடைபெறவிருக்கிறது

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

நயினையில் நாகபூஷணி அம்பாள் கோவிலில் ஆடிப் பூரத்தையொட்டி இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது இம் மாதம் 7ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் விசேட அபிஷேகம் ஸ்ரீ சக்கரபூசை இலட்சார்ச்சனை என்பன தினமும் மாலை நடைபெறுகின்றன. 28ம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இலட்சார்ச்சனை நடைபெற்று 29ம் திகதி புதன்கிழமை ஆடிப் பூரத்தன்று 1008 சங்காபிஷேகமும், பூரகர்மாவும், இலட்சார்ச்சனை பூர்த்தியும் நடைபெறும். (ப)

## தகவல் தாருங்கள்

சாவகச்சேரியைவதிவிடமாகக்கொண்ட அ. விஜயகுமார் (வயது-22) சிவந்த நிறம், கடந்த 15ம் திகதியன்று பூநகரி செம்மன்குன்றிலிருந்து புறப்பட்டவர் வீடுவந்து சேரவில்லை. அவர்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து அறியத்தரவும்.

திருமதி வி. சாந்தினி,
மே/பா
திரு. எம். செல்வரட்ணம்
426, கிள்னர் கட்டடம்
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

★ ★

மன்னார் பனங்கட்டிக் கொட்டு பகுதியைச் சேர்ந்த ஆர். நடேஸ் ஜீவா, சித்தா அந்தோணி அம்மா, புஸ்பகுமார், எம் எஸ் ராஜரத்தினம் டல்சீ, ஆகியோர் பற்றி கடந்த ஒருமாதத்திற்கு மேலாக அறியமுடியவில்லை. அவர்கள் பற்றிய தகவல் தாருங்கள்.

எம். எஸ். புஸ்பராசா,
கண்டி வீதி,
கொடிகாமம்.

★ ★

உடுப்பிட்டியைச்சேர்ந்த செல்வி குணரட்ணம் கலாவதி [உடுப்பிட்டி பாலர் பாடசாலை ஆசிரியை] செல்வி குணரட்ணம் மைனுவதி ஆகிய இருவரையும் உறவினரான வல்வெட்டி வித்தினையைச் சேர்ந்த துரைசாமி தயாபரன் தேடுகின்றார். இவர்கள் எங்கிருந்தாலும் கீழ்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். அல்லது இவர்களை பற்றிய தகவல் அறிந்தோர் அறியத்தரவும்.

துரைசாமி தயாபரன்
மே/பா வ. தியாகராசா.
'ராஜஸ்தான்'
குமரகோட்டம்,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

## சர்வோதய பாடசாலை

பலாலி, ஞாயிறு

சங்கானைப்பகுதியில் அகதிகளான மாணவர்களுக்குகல்வி புகட்டுவதற்கென சர்வோதய இயக்கம் பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

## புகைவண்டியை தவறவிடும் யாழ்.பயணிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வவனியாவிலிருந்து புகையிரதத்தில் கொழும்பு செல்வதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பயணிகள் தினமும் புகையிரதத்தை தவற விடுகின்றனர்.

தினமும் அதிகாலை ஐந்து மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பஸ் செல்வதற்கு முன் புகையிரதம் வவனியா புகையிரத நிலையத்திலிருந்து புறப்படுவதாலே தமது பயணத்தை தொடரமுடியாதுள்ளதாக யாழ். பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ)

## உணவுப்பொருள்கள் வழங்கல்

(நெடுந்தீவு)

பாதிக்கப்பட்டோருக்கான உணவுப்பொருள்கள் நெடுந்தீவப் பகுதியில் இப்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்களுடன் பருப்பு பால்மா போன்ற உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் இப்பொருட்கள் வழங்கப்படுகின்றது.

இப்பகுதி மக்களுக்கு சுமார் இரண்டுலட்சம் ரூபாபெறுமதியான உணவுப் பொருள்கள் கிடைக்குமென்று தெரியவருகின்றது.

## கொடியேற்றம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை சின்னமடு தேவாலயம் கொடியேற்றம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

## ஆலயத்தில் திருட்டு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சுருவில் ஐயனார் கோவில் மடப்பள்ளியின் கூரை ஓடுகளை அகற்றி உள்ளிறங்கிய திருடர் வைரவர் சூலம், வெள்ளியிலான பல பெறுமதியான பொருள்களை களவாடிச்சென்றுள்ளனர்.

## சேதங்களை பார்வையிட்டனர்

[கொழும்புத்துறை நிருபர்]

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளித்துவரும் பிரான்ஸ் டாக்டர் குழுவினர் கரவெட்டி அந்தோனியார்ஆலயம், கரவெட்டி திருஇருதயக் கல்லூரி கொன்வென்ற் ஆகியவற்றிற்குச் சென்று ஷெல் விழுந்து வெடித்துச் சேதமான பகுதிகளைப் பார்வையிட்டனர்.

## முகாம் பலப்படுத்தல் தீவிரம்

கிளிநொச்சி, ஞாயிறு

பூநகரி இராணுவ முகாம் பலப்படுத்தும் வேலைகளில் இராணுவ சிப்பாய்கள் கடந்த சில தினங்களாக ஈடுபட்டுள்ளனர்.

முகாமின் முன்பாகவுள்ள வீடுகளில் அகழிகள்தோண்டுதலும்அரண்கள் சீரமைக்கும் நடவடிக்கையிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை பிரயாணிகள் சோதனையிலும் பூநகரி இராணுவம் ஈடுபட்டுள்ளது.

பல்தெரிவு வினாக்கள் மூலம்
பொது இரசாயனமும்
பௌதிக இரசாயனமும்
(உயர் வகுப்புக்குரியது)

ஆசிரியர்கள்: ம. செல்வரத்தினம், B Sc (Cey), Ph. D. (Lon), D I. C.
[பௌதிக இரசாயன பேராசிரியர்]
இராஜேஸ்வரி மகேஸ்வரன் B Sc (Cey) Ph. D. (Staff)
[அசேதன இரசாயனப் பேராசிரியர்,
யாழ். பல்கலைக்கழகம்]

விலை ரூபா. 60/-

வெளியீடு - விற்பனை:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம். (சி-0052)

ROCK Engineers & Contractors in
Water Supply Works
TUBE WELLS, PUMP (HAND PUMP ALSO) FITTINGS, PIPE LININGS & TANKS.

குழாய்க்கிணறுகள் (மெஷின்கள் மூலம்)

மணற்கண்டமா, கழிக்கண்டமா, கற்கண்டமா, காவி நீரா, உப்பு நீரா, உங்கள் கிணறு வற்றிவிட்டதா எதற்கும் எம்முடன் கலந்தாலோசியுங்கள் குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் போதிய நீருடன் (24 மணித்தியாலமும் தொடர்ச்சியாக இறைக்கக்கூடியதாக) உத்தரவாதத்துடன் அமைத்துத் தருவோம்.

தொடர்பு:-
றெக் என்ஜினியர்ஸ்,
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
(எ-0051)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 27-7-87

# 'சமாதானத்துக்கு இறுதிச்சந்தர்ப்பம்' — றெனி

## "தீவிரவாதம் தொடர்ந்தால் அழிவு" -காமினி

(கொழும்பு)

இலங்கையில் கௌரவத்துடன்சமாதானத்தைஏற்படுத்த இதுவே கடைசிச் சர்தர்ப்பமாகும் என்று நிதி அமைச்சர் திரு. றொனி டி மெல் அகலவத்தையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"தற்போதைய சமாதானத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் நாடு இரண்டாகப் பிளவுபடுவதற்கும் எமது சுதந்திரத்தையும். இறைமையையும் இழப்பதற்கு வழிகோலுபவர்களாகவே இருப்பார்கள்.

சமாதானத் திட்டத்திற்கு ஆதரவு அளிப்பவர்கள் சுதந்திரத்திற்குப் பின் தோன்றிய இருள் மயமான காலத்துலிருந்து எமது நாட்டை மீட்டெடுத்தவர்கள் என வரலாற்றில் இடம் பெறுவர்.

பூகோள அமைப்பில் இந்தியாவின் உதவியின்றி போரில் வெற்றியடையவோ, சமாதானத்தை ஏற்படுத்தவோ எம்மால் முடியாது என்றார்.

இதேவேளை காணி. காணி அபவிருத்தி மகாவலி அபிவிருத்திஅமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா நேற்று கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசியதாவது;

"தீவிரவாதம் இந்த நாட்டில் இன்னும் சில வருடங்களுக்கு நீடிக்குமானல் உலக பூலோகப்படத்திலிருந்தே எமது நாடு முற்ருக அழிந்துவிடும்''.

இவ்வாண்டு பாதுகாப்புக்கென நாம் இதுவரை 1200 கோடி ரூபாவைச் செலவிட்டுள்ளோம் இந்த தடவை சமாதானம் ஏற்படாவிடின் அடுத்த ஆண்டு மேலும் கூடுதலான பணத்தை செலவிட நேரிடும் என்ருர்.

## மீண்டும் பழைய இடத்தில் பஸ் நிலையம்?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் பஸ் நிலையம் மீண்டும் இன்னும் சில தினங்களில் பழைய இடத்திற்கு மாற்றப்படலாமென அறியப்படுகிறது

இதற்கு முதல் நடவடிக்கையாக யாழ். பஸ்நிலையத்தில் உள்ள டீசல் நிரம்பும் நிலையத்தில் நேற்று டீசல் நிரப்பப்பட்டதையும், நிரப்பிச் சென்றதையும் காணமுடிந்தது.

இ இவ்வாறிருக்க நேற்று ஞாயிற்றுக்கிழமையாகஇருந்த போதும் யாழ் பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள சில கடைகள் திறக்கப்பட்டிருந்தன. மின்சாரநிலைய வீதியிலும் சில புடவைக்கடைகளும் அவ்வீதியில் ஏற்கனவேஇருந்து வந்த வீதியோரக் கடைகளிலும் வியாபாரம் நடைபெற்றதையும், சன நடமாட்டம் வழமைக்கு மாருக இருந்ததையும் காணமுடிந்தது. (வா)

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புச் செய்வதற்கு இந்தியா உதவி அளிக்கும்.

இந்தியாவின் அந்த இரண்டாவது கட்ட உதவியின் போது மன்னர் மாவட்டத்திற்கும் இந்திய உதவி கிட்டும் என்றும் திரு. சௌத்ரி தெரிவித்தார்.

## இஸ்ரேல், பாகிஸ்தான் குறித்து ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பில் தவறு

[கொழும்பு]

"இலங்கையில் இயங்கும் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு மூடப்படும், இஸ்ரேலிய ஆலோசகர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவர். பாகிஸ்தானில் பயிற்சிபெற இலங்கை இராணுவத்தினர் அனுப்பப்பட மாட்டார்கள்''

இவ்வாறு ஜனதிபதி ஜயவர்த்தன எதுவும் தெரிவிக்கவில்லை எனினும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தவறுதலாக ஒலிபரப்பிவிட்டது இதற்கான மன்னிப்பையும் அது கோரியுள்ளது.

ஜனதிபதி ஜயவர்த்தன நேற்று முன்தினம் ஐ. தே. கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் உரையாற்றியதாக மேற்படி செய்தியை நேற்றுமுன்தினம் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஒலிபரப்பியிருந்தது

எனினும் இவ்வாறு திரு. ஜயவர்த்தன அப்படி எதுவும் தெரிவிக்கவில் லையென்றும் சுதந்திரக் கட்சி தலைவி தாம் ஆட்சிக்கு வந்தால் மேற்படி தொடர்புகளை உடன் நிறுத்துவதாகவும் கூறியதை மேற்கொள் காட்டியே ஜனதிபதி உரையாற்றியதாகவும் தெரிவித்துள்ளது. (சி)

## புலிகள் அறிவிப்பு: அதிரடி படையினர் நால்வர் பலி!

யாழ்ப்பாணம், திங்கள்

மொறக்கொட்டாஞ்சேனையில் நேற்று விடுதலைப் புலிகள் இயக்க வீரர் ஒருவர் மேற்கொண்ட கைக்குண்டு தாக்குதலில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டதாகவும் மற்றும் நால்வர் பலத்த காயமடைந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது; நேற்றுப் பகல் இப்பகுதியில் தேடுதல் மேற்கொண்ட அதிரடிப்படையினர் ஒரு விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியைக் கைதுசெய்ய முயன்றபோது அவர் மேற்கொண்ட கைக்குண்டுதாக்குதலில் படையினர் நால்வர் பலியாஞர்கள் நால்வர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை நேற்று யாழ். கோட்டைமுகாம் இராணுவத்துடனன மோதலில வீரமரணமடைந்த யோகனுக்கும் (ஐ யோகேந்திரன், புன்னலைக் கட்டுவன்), வளலாய் இராணுவத்துடனன நேரடி மோதலில் வீரமரணமடைந்த காந்தி [கார்த்திக் கண்டி]க்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (சி)

## டாக்டர்கள், பட்டதாரிகள் பற்ருக்குறையாயின் — பல்கலைக்கழக அனுமதிகளை அதிகரிக்கவும்

### யாழ். மருத்துவபீட மாணவர் ஒன்றியம் மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

"டாக்டர்கள் மற்றும் பட்டதாரிகள் பற்ருக்குறை நிலவுவது உண்மையானல் அதனை நிவர்த்திசெய்ய பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதனைத் தவிர்த்து தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவுவதன் மூலம் அரசு தனது பிறிதொரு சதித்திட்டத்தை மெதுவாக அமுல்படுத்துகிறது'' என்று யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் பல்கலைக் கழகபதிவாளர் ஊடாக துணைவேந்தரிடம் கையளித்த மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட இலங்கை தனியார் மருத்துவ கல்லூரியை யாழ் பல்கலைக்கழகத்துடன் இணைக்க கோரும் தீர்மானத்தை ஆட்சேபித்தே யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் இம் மகஜரை கையளித்தனர்.

அம்மகஜரில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;அரச கூட்டுத்தாபனம் இயங்கும்போது அதற்குசமனக ஒரு தனியார் நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டால் கூட்டுத்தாபனம் நலிவடைய தனியார் நிறுவனம் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்யும்.

இலங்கை போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் மூடப்படுவது இதற்கு சிறந்த உதாரணமாகும்.

தனியார் கல்வி நிறுவனங்கள் படிப்படியாக பல்கலைக் கழகங்களை நலிவடையச் செய்யும் போது உயர்கல்வி முழுமையாக தனியார் கைகளுக்கு மாறும் இதனல் உயர்கல்வி உயர்மட்ட வர்த்தகத்திற்கு தாரைவார்க்கப்படுவதுடன் இலவச கல்விமுறைக்கும் ஆபத்து ஏற்படும் வறிய மாணவர்கள் உயர்கல்வி கற்க முடியாத நிலை ஏற்படும். [ஒ]

## பலமணிநேரம் சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகள் குறித்து புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், இந்திய அரசு உயரதிகாரிகளும், தமிழக முதலமைச்சரும் போராளிகள் குழுக்களுடனும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் நேற்று பலமணி நேரம் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். பேச்சுக்கள் பற்றிய விபரமெதுவும் வெளியிடப்படவில்லை.

இப் பேச்சுக்களில் உதவுமுகமாக தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் புதுடில்லி அழைக்கப்பட்டிருந்தார். இவருடன் தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரனும் புதுடில்லி சென்றிருந்தார்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொள்ளவிருந்த வன்னி மாவட்ட சமாதானக் குழுத்தலைவரும் பௌத்த விகாரதிபதியுமான வண. சியம்பலகஸ்வெவ தேரோ குழுவினரின் பயணம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்னை தீர்வுதொடர்பாக தற்போது இந்திய-இலங்கை அரசுகளுக்கிடையேயும் தமிழ்குழுக்களுக்கிடையேயும் நடைபெறும் பேச்சுவார்த்தைகளை முன்னிட்டு இவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் புலிகளிடம் பிடிபட்ட பாதுகாப்பு படையினரின் பெற்றோர், உறவினர்களும் கொழும்பு பத்திரிகையாளர், சர்வோதயப் பிரமுகர்களும் வருவதாக இருந்தது. (சி)

## காங்கேசன்துறை கி. சே. அ. பிரிவு இடம்பெயர்ந்தோருக்கு இந்திய நிவாரண உதவி

யாழ்ப்பாணம், திங்

இராணுவ நடவடிக்கைகளினல் காங்கேசன்துறை கிராம சேவை அலுவலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்கான அனுமதிப்பத்திரம் நாளை மறுதினம் புதன்கிழமை மல்லாகம் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் வைத்து கிராம சேவையாளர் திரு மு கனகநாயகத்தினல் வழங்கப்படவுள்ளது.

இந்திய நிவாரணப் பொருள்களை வேறு இடங்களில்அவற்றைப் பெற்றவர்களுக்கு வழங்கப்படமாட்டாதென்றும், ஏற்கனவே கிராமசேவை அலுவலரிடம் இருந்து பெற்றுக் கொண்ட அட்டை அடையாள அட்டை என்பவற்றுடன், பிரதான குடியிருப்பாளர், அல்லது 18 வயதுக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தவர் மட்டுமே வந்து இந்த அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கிராம சேவையாளரினல் அறிவிக்கப்பட்டுள்ளது. (வா)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் ஐயாத்துரை

காலஞ்சென்ற எட்வேட் துரைசிங்கம் ஐயாத்துரை அவர்களின் அருமை மனைவியும் சரோஜினி தேவி, சாந்தாதேவி, உஷாதேவி, பிரேமா [கனடா] ஸ்கந்தராஜா [நோர்வே] அவர்களின் அன்புத்தாயாருமாகிய திருமதி அன்னபூரணம் ஐயாத்துரை அவர்கள் 26-7-87 அதிகாலை சிவபதமடைந்தார். அன்னர் எஸ். தர்மலிங்கம் [இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர், யாழ்ப்பாணம்] எஸ் ஜெயானந்தம் [Sri Lanka p A திருகோணமலை] செல்வநாதன் [Ever Sound Radio, பண்டத்தரிப்பு] மனேகரன் [கனடா] பிறேமா அவர்களின் மாமியாரும், கௌசலாதேவி அகல்யாதேவி [London] சடாயினி தேவி[Lon] சித்திராங்கனி, பஞ்ஞகிரிதா [கனடா] தர்மினி, முரளிதரன் [ஜேர்மனி] தமயந்தி [யாழ் வளாகம் பௌதீக பீடம்] ஹரிராம், கமலராம், நிலாந்தினி, மாதினி லின்சி [கனடா]ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் சங்கானை இந்து மயானத்தில் நடைபெற்றது.

எஸ். ஆர். தர்மலிங்கம்,

தேவாலயவீதி,
சங்கானை.

[சி-0055]

## ஆகஸ்ட் முதல் வாரத்தில் நோர்வே செஞ்சிலுவை குழு யாழ்ப்பாணம் வருகிறது

(பண்டத்தரிப்பு நிருபர்)

நோர்வே நாட்டு செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் குழுவொன்று யாழ் குடாநாட்டு மக்களுக்கு நிவாரணப் பொருட்களை நேரடியாக வழங்குவதற்கு ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் இங்குவருகைதரவுள்ளது

நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தலைவர், நோர்வே நாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச பிரிவுத்தலைவர், இலங்கையிலுள்ள நோர்வே நாட்டு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. ஹோம் ஆகியோரும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

ஒருவாரகாலம் யாழ் குடாநாட்டில் தங்கியிருக்கும் இக்குழுவினர் இங்குள்ள பல்வேறு பகுதிகளிலுமுள்ள அகதிகள் முகாம்களுக்கும் யாழ் செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளுடன் நேரடியாக சென்று பார்வையிட்டு உடுபிடவைகள் உட்பட தாங்கள்கொண்டுவரும் நிவாரணப் பொருட்களை அன்பளிப்புசெய்வார்கள்.

இக் குழுவினரின் வருகை பற்றி யாழ் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.